1263

Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 14 No. 9.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே



| | | |
|---|---|---|
| மலர் 14 | விஷு ஆண்டு புரட்டாசித் திங்கள்<br>1941ஞ செப்டம்பர்மீ | இதழ் 9 |



உள்ளுறை



| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு | ... | 417 |
| The Saiva Mutts | ... | 429 |
| சித்தாந்த சைவ வினா விடை | ... | 433 |
| சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும் சிவாக்கிர யோகிகள் உரையும் | ... | 4[illegible] |



ஆசிரியர் : திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்

A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

2. 1941 தனிப் பிரதி அணா 4.

JL
R673 வைடN38 S1
N41.14.9
189770

உ
முருகன் துணை

# மணிவிழாச் சொற்பொழிவுகள்

சென்னை, இராயப்பேட்டை, சாது அச்சுக்கூட உரிமையாளரும், 'சித்தாந்தம்' பத்திரிகை ஆசிரியரு மாகிய திருவாளர் - **திரு. வி. உலகநாத முதலியார்** அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா (மணி விழா), சென்னை வேதாந்த சங்கம், சைவ சித்தாந்த மகா சமாஜம், இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை இவைகளின் ஆதரவில், 1941 ஆம் செப்டம்பர்மீ 12, 13, 14-ஆம் தேதிகளில், சிந்தாதிரிப் பேட்டை உயர்தர கலாசாலையில் கீழ்க்காணும் முறைப் படி நிகழும்.

அன்பர்கள் போதருவார்களாக.

**தே. போ. மீனாட்சிசுந்தரன்**
**ம. பாலசுப்பிரமணியன்**
**G. கலியாணம்**
*சங்க, சமாஜ, சபைச் செயலாளர்கள்.*

---

## நிகழ்ச்சி முறை

### முதல் நாள்

12-9-41 வெள்ளி - மாலை 5-30 மணி முதல் 8 மணி வரை

*தலைவர் :*
திவான் பகதூர்
**K. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள்**

கடவுள் வணக்கம்
தலைவர் முன்னுரை
'ஆயர் குழல்' —திரு. ச. சிவகுமாரன், M. A.
'திருமுருகாற்றுப்படை' —திரு. T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், M. A., B. L., M. O. L.
தலைவர் கருத்துரை



திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

௨௪-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

Reg. M. 2330

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

| மலர் 14 | விஷு ஆண்டு புரட்டாசித் திங்கள் 1941ஆம் செப்டம்பர்மீ | இதழ் 9 |
|---|---|---|

## மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

இப்பெயர் கொண்ட மகாநாடு மிகச் சிறப்பாக 1941ஆம் ஆகஸ்டுமீ 28, 29, 30, 31-ம் தேதிகளில் தருமபுர மடாலயத்தில் நடந்தது. இம்மகாநாட்டு நிகழச்சி வரலாற்றைத் திருமடத்தினர் அன்பு கூர்ந்தெழுதி யனுப்பி நமது பத்திரிகையில் வெளிவருதற்குத் துணை செய்தனர். இவ்வரலாறு இக்கட்டுரையின் இரண்டாம் பகுதியாகச் சேர்க்கப்பெற்றுள்ளது. இதிலிருந்து இம்மகாநாடு எவ்வளவு செம்மையாகவும் அனைவரும் வியக்கத்தக்க உயரிய முறையிலும் நடந்ததென்பது நன்குக விளங்கும். இம்மகாநாடு நமது சென்னை மாகாணம் முழுமையும் விளம்பரம் செய்யப்பெற்று இதற்குரிய வேலைகள் ஏறக்குறைய நான்கு மாதங்களாக நடைபெற்றன. நமது சமாஜம் திருமடத்தினரோடு வேண்டியவாறெல்லாம் ஒத்துழைத்தது. சமாஜத் தலைவர், உதவித் தலைவர், காரியதரிசி, பத்திராசிரியர், உதவிப் பத்திராசிரியர், நிர்வாக சபையினருட் பெரும்பான்மையோர், அங்கத்தினர் பலர் சென்று மகாநாட்டிற் கலந்துகொண்டனர். மகாநாட்டிக்குச் சென்றோர் அனை

வருக்கும் அன்பு கனிந்த உபசரிப்பு அளிக்கப்பட்டது. எல்லோரும் கண்ணாரக் கண்டு செவியாரக் கேட்டு வயிறார உண்டு வாயார வாழ்த்தினார்கள் என்பது உண்மையேயாகும்.

மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் "சோறு மணக்கும் மடங்களெலாம்" என்றனர். சோறு என்பதற்கு உணவு, மோக்ஷம் என்ற இரண்டு பொருளுண்டு. "இம்மையே தரும் சோறும் கூறையும்", "பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" என்ற அருள் வாக்குக்களால் இஃது அறியப்படும். தருமபுரத் திருமடத்தில் இவ்விருவகைச் சோறும் நறுமணம் வீசி, யாண்டும் சிவமணமே கமழ்ந்தது. இம்மகாநாட்டுப் பிரசங்க மேடைக்கெதிரில் "மடங்களைப்பற்றி இம்மகாநாட்டில் பேசுவது பொருத்தமாகாது, இங்கே பிற மடங்களைக் குறைகூற அனுமதிப்பது எங்களுக்கழகல்ல, இதைக் கருத்திற் கொண்டு பேசும்படி விரும்பப்படுகிறது- காரியதரிசி" என்று எழுதப்பட்டிருந்த எச்சரிக்கை தொடக்கத்தில் சிறிது வியப்பை விளைவித்ததேனும், விரைவில் மகாநாட்டின் நடைமுறையின் செம்மை உபசரிப்பின் மேன்மை முதலியன எல்லோருள்ளத்தையும் கொள்ளை கொண்டுவிட்டது.

சமாஜத் தலைவரவர்களுடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களைத் தனியே கலந்து பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அப்போது நிகழ்ந்த சம்பாஷணையிலிருந்து இத்திருமடத்துத் தலைவரவர்கள் சமயப்பிரசாரம் செய்வதில் நிரம்பிய ஊக்கமுடையவர்களென்பதும், எடுத்த காரியங்களை மிகச் செம்மையாகச் செய்து முடிக்கும் பேராற்றல் வாய்ந்தவர்களென்பதும், தகுதியுள்ளவர்கள் செய்யும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையுடையவர்களென்பதும், இத்தகைய மகாநாடுகளை அவ்வப்போது கூட்டுவிக்கும் உறுதி கொண்டுள்ளவர்களென்பதும் பிறவும் நன்கு புலனாயின.

சைவசமயத்துக்கு நல்ல காலம் வந்துள்ளதென்று மகாநாட்டுக்கு வந்தோர் பலர் மகிழ்ந்து கூறினர்: இந்த நல்ல காலம் விரைவில் மாறாது நீடித்திருந்து திருமடங்கள் சைவத்தொண்டர்கட்கு முன்னணியில் நின்று, பிறசமயிகள் செய்கின்ற வேலைகட்குப் பதின் மடங்கு வேலைகளைச் செய்து, பொன்றாப்புகழையும் குன்றாத புண்ணியத்தையும் பெறுமாறு முழுமுதற் கடவுள் அருள்புரிவாராக. தருமபுரம் [illegible] தலைவர் வாழி, திருத்தொண்டர்கள் வாழி.

189770



## இரண்டாம் பகுதி

### திருமடத்தினர் எழுதி யனுப்பிய வரலாறு

### (Official account of the Conference)

சீர் சிறந்த செந்தமிழ் நாட்டுக்கே மேலான சிறப்பை நன்கு விளைவித்த இம்மகாநாடு நிகழும் விஷு ஆண்டு ஆவணித்திங்கள் 12, 13, 14, 15-ம் நாட்களில் வியாழன், வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் (1941 ஷை ஆகஸ்டு மாதம் 28, 29, 30, 31) தருமபுரம் ஆதீனம் 24-வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகளின் பேராதரவில் ஆதி குருமூர்த்தி ஸ்ரீ ஞானசம்பந்தர் ஆலயத்தில் நன்கு அலங்கரிக்கப்பெற்ற திருப்பந்தலில் நடைபெற்றது. தமிழ் நாட்டின் நான்கு பக்கங்களிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும் சைவ சீலமும், தமிழறிவும், சிவஞானமும் நிரம்பிய புலவர் பெருமக்களும், தமிழன்பர்களும், சைவப்பற்றுடைய பெருநிலக் கிழார்களும், அறிஞர்களும் பெருங் கூட்டமாக வந்து பேரறிஞர்கள் அருமையாக நிகழ்த்திய பிரசங்கங்களைக் கேட்டு இதயம் பூரித்தனர்.

தருமபுர ஆதீனத் திருமடாலயத்துள்ளும் வீடுகளிலும் திருவீதிகளிலும் சைவ மணமும், தமிழ் மணமுமே வீசிக்கொண்டிருந்தன. அன்றியும் ஒவ்வொருவர் வாயிலும் சைவ மணமும் தமிழ் மணமும் ஒருங்கே கெழுமிய பெரியதொரு மகாநாடு தமிழ் நாட்டில் எங்குமே இவ்வளவு செம்மையாகக் கோலாகல வைபவத்துடன் அழகாக நிகழ்ந்ததில்லை என்னும் சொல்லே பெருஞ் சொல்லாக முழங்கிக் கொண்டிருந்தது. மெய் கண்ட சித்தாந்த மகாநாட்டைக்கண்டு களிக்க வந்த யாவரும் உரிய காலத்தில் அன்பு பொழியும் உபசாரமாக நான்கு நாட்களும் காலை மாலைகளில் சிற்றுண்டிகளும் பகல் இரவுகளில் அறுசுவையுடன் கூடிய நல்லுணவும் பாயாச பலகாரங்களுடன் நன்றாக வழங்கப்பட்டன. இரவு பசுவின் பாலும் தரப்பட்டது. நிர்வாக சக்தியும் அனுபவமும் பெற்ற அடியார் குழாங்கள், காரியஸ்தர்களுடைய மேற்பார்வையில் ஒழுங்கான முறையில் எல்லா விஷயங்களையும் குறை யென்பதின்றி நிறைவுடன் நிகழ்த்தியது பெரிதும் பாராட்டற் குரியது. ஸ்ரீலஸ்ரீ மஹா சந்நிதானத்தின் தேர்ந்த தீர்க்காலோசனையும், திறமை மிக்க கண்ணோட்டமும் அன்பு கனிந்த கவனிப்புமே இத்துணைச் சிறப்பிற்கும் காரணம் எனக் கூறின் அது மிகையாகாது. சுருங்கக் கூறின் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு சீரிய சிறப்பில் மகிழ்ச்சி பொங்

கும் வகையில் தமிழ் மணமும், சைவமணமும் இனிது கமழ, தெய்வ மகா சபையாக விளங்கியும் கண்டார் கண்ணிற்கும் செவிக்கும் மனதிற்கும் தேக்கித் திளைக்கும் இன்ப விருந்தாக இருந்த தென்றே கூறவேண்டும்.

மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு முதல் நாள் 28-8-41 வியாழக்கிழமை நிகழ்ச்சிகள் :—

ஆதி குருமூர்த்தி ஸ்ரீ குருஞான சம்பந்தர் ஆலயத்தில் அமைந்த மகாநாட்டு மண்டபத்தில் ஸ்ரீ பொல்லாப் பிள்ளையார், கல்லால் நிழலில் சந்தான முதற் குரவர்க்குச் சிவஞானபோதம் உபதேசம், சமயாசாரியார், மெய்கண்ட தேவர் ஆகியவருடைய திருவுருவப்படப் பிரதிட்டையும் ஆதிகுரவர் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக மூர்த்திகளுக்கு அபிடேக ஆராதனை வழிபாடும் நிகழப்பெற்றுச் சபையார்களுக்குச் "சித்தாந்த சைவ வினாவிடை" என்னும் புத்தகம் இலவசமாக வழங்கப் பெற்றது.

இரண்டாம் நாள் 29-8-41 வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிகள் :—

மெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டுத் தலைவர், காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்களையும், சென்னை H. R. E. Board கமிஷனர் இராவ்பகதூர் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L., அவர்களையும் மகாநாட்டு மண்டபத்திற்கு ஆதீனம் தேவார பாடசாலையிலிருந்து இனிய வாத்திய கோஷ்டியுடன் அழைத்தலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மகாநாட்டு மண்டபத்திற்கு எழுந்தருளுதலும் நிகழ்ந்த பின்னர் இன்னிசைமிக்க தேவாரப் பண்ணிசை இன்னிசைக் கருவிகளுடன் இனிதொலிக்க ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் மகாநாட்டைத் திறந்தருளியதும் திறப்புரை வழங்கப் பெற்றது.

வழி மொழியாகக் காரியதரிசி ஸ்ரீ மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "மெய்கண்டான் சித்தாந்தம்" பற்றி விளக்கிப் பேசினர். திருவாளர் இராவ்பகதூர் C.M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களும் திருச்சி திருவாளர் அரங்கசாமி முதலியார் அவர்களும் (Deputy Inspector of Local Boards and Municipal Councils) சார்புரை மொழிந்தார்கள்.

சார்புரையில் திரு. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் இவ்வாதீனத்தில் இம்மகாநாட்டைக் கூட்டிச் சிறந்த முறையில் அழகாக நடத்திக்காட்டிய மாண்பு மகா சந்நிதானத்துக்குரித்தானது என்றும், இம்மகாநாடு வழிகாட்டியாகவிருந்து பல மகாநாடுகளை நடத்த மற்றவர்களுக்கும் ஊக்கமும் உணர்வும் கொடுக்கக்கூடிய



தென்றும் இது முதல் மகாநாடாக யிருந்தபோதிலும் முதல்தர மகாநாடாக நடத்தப்பெற்றதுபற்றி மிக மகிழ்ச்சியுறுவதாகவும் பேசினார்கள். ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் நகரசபைகளுக்கும் உதவி இன்ஸ்பெக்டர் திரு. அரங்கசாமி முதலியார் அவர்களுடைய சார்புரையில் தமிழ் நாட்டுக்கே மிகுந்த பெருமையைத் தரத்தக்க முறையில் இந்த மகாநாடு சைவத்தில் மிக்கதோர் ஊக்கமும் பற்றுதலும் உண்டாக்கும் என்றும் பல பேரறிஞர்களை ஒரு சேரக்காணும் காட்சி சைவநெறி தழைத்தோங்கும் அறிகுறி என்றும் கூறி, இம்மகாநாட்டைக் கூட்டி இவ்வளவு செம்மையாக நடத்திக் காட்டும் மகா சந்நிதானத்துக்கு நன்றிகூறி முடித்தார்.

பின்னர் பழனி வேதாகமபாடசாலைத் தலைமை ஆசிரியராகிய காசிவாசி சென்னிமலை சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் ஆதீனத் திருக்கூட்டத்து ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகளால் மகாசந்நிதானத்தின் திருவுளப்படி வாசித்தளிக்கப்பட்டது.

அவர்கள் தலைமை தாங்கி, இக்காலத்தில் தமிழகத்தில் விவாதத்திலிருக்கின்ற வடமொழி சிவஞானபோத முதல் நூலைப்பற்றிய ஆசங்கைகட்கு வடமொழி தென்மொழி நூல்களிலிருந்து சிறந்த ஆதாரங்களை அறிஞர்கள் சரியென்று ஒப்பும் வகையில் திறமையாக எடுத்துக் கூறியும் ஒற்றுமை நயங்களை அழகுபெற எடுத்துக்காட்டியும் தலைமையுரை மொழிந்தனர். இவரது அருமை மிகுந்த சொற்பொழிவு மெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டுக்கே தனிப்பெருஞ் சிறப்பை விளைவித்தது மகிழ்ச்சிக்குரியது.

பின்னர் முதல் சூத்திரத்தைப்பற்றி முறையே திருவாளர்கள் ஆரணி முத்து.சு.மாணிக்கவாசக முதலியார், காஞ்சீபுரம் வச்சிரவேல் முதலியார் B.A., L.T., சென்னை பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார், தாம்பரம் சமரபுரி முதலியார் ஆகியவர்கள் ஒருவர் கூறியதை மற்றொருவர் கூறாமல் அவரவர்களும் தாம்தாம் நுணுகி ஆராய்ந்து சாத்திர சாரங்களை எளிய நடையில் சபையில் எடுத்துச் சொன்னார்கள். இரண்டாம் சூத்திரம்பற்றி நெல்லை பேரறிஞர் A. முத்தையா பிள்ளை அவர்கள் B.A., B.L. தெளிந்த கருத்துக்களை வெளியிட்டார்கள். மூன்றாம் சூத்திரம்பற்றி ஜலகண்டபுரம் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள் தம் முதுமொழிகளை வெகு வேகமாகச் சபையார்க்கு நகைப்பு வரத்தக்க முறையில் பொழிந்தார்கள். திருவாரூர் வித்வான் S. தண்டபாணி தேசிகர் நான்காம் சூத்திரம்பற்றி எழுதி அனுப்பிய கட்டுரையைத் தழுவி இனிய மொழிகளால் பேசினார்கள்.

ஐந்தாவது ஆறாவது சூத்திரங்களைப்பற்றி அரும்பொருட் சீரிய மொழிகளோடு எழுதியனுப்பி அச்சிட்டிருந்ததையொட்டி திருநெல்வேலி அ. முத்தையா பிள்ளை அவர்கள் ஆழ்ந்த கருத்துக்கள் தெளிவுறும்படிக் கூறினார்கள். தலைவர் முடிவுரை, திருமுறை பாராயணம் நடக்கச் சபை கலைந்தது. மாலை அநுட்டானாதிகளை முடித்துக் கொண்டு அனைவரும் மறுபடியும் கூடினார்கள். திருச்சி தங்காம் பிள்ளை யோகாசனங்களைப் போட்டுக் காண்பித்து அந்நுட்பங்களை எடுத்துக் கூறினார். அவர் மாணவர் சிதம்பரம் N. தண்டபாணி பிள்ளை அவர்கள் யோகாசன உட்கருத்துக்களைப்பற்றிப் பாராட்டிப் பேசினார்.

**மூன்றாம்நாள் (30-8-41) சனிக்கிழமை நிகழ்ச்சிகள் :**—அன்றையதினம் தலைமை வகிக்கும் இராவ்பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களை ஆதீனம் தேவார பாடசாலையிலிருந்து சகல மரியாதைகளுடன் மகாநாட்டு மண்டபத்துக்கு அழைத்து வந்து அப்போது அங்கெழுந்தருளிய மகா சந்நிதானத்தால் வரவேற்கப்பெற்று ௸ ஆதீனம் அடியார் குழாத்துள் ஒருவராகிய சிவகுருநாதத் தம்பிரான் சுவாமிகளால் மகா சந்நிதானத்தின் திருவுளப்படி வரவேற்புப் பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது. அவைத் தலைமை தாங்கிச் சமய சம்பந்தமான மகாநாடுகளின் அவசியத்தையும் பயனையும் எடுத்துக்கூறி இம்மகாநாடு இனிமேல் நிகழவேண்டிய சைவ சமய மகா நாடுகளுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக அமைந்துள்ள சிறப்பையும் அழகாகப் பேரானந்த முகமலர்ச்சியுடன் விரித்துரைத்தனர். ஆழ்ந்து படித்துச் சிந்தித்தால்தான் சித்தாந்தக் கருத்துக்களை நன்றாய் அறிந்து அனுபவிக்க முடியுமென்று சிறுகதைமூலம் விளக்கினார். பின்னர் ஏழாஞ்சூத்திரக் கட்டுரை எழுதி அனுப்பிய திருநெல்வேலி மா. வெ. நெல்லையப்ப பிள்ளை B. A. அவர்கள் தம் தளர்ந்த வயதில் ஆர்வத்தோடும் அன்போடும் சுருக்கமாக அச்சூத்திர அரிய விஷயங்களை அழுத்தமாகக் கூறினார்கள். இவர்கள் கட்டுரை அச்சாகியிருந்து சபையோருக்கு வழங்கப்பட்டது. எட்டாம் சூத்திரத்தின் பொருளையும் கருத்தையும் நயம் மலியத் திருவையாறு தமிழ் காலேஜ் வித்வான் இ. கோவிந்தசாமி பிள்ளை, விழுப்புரம் முனிசிபல் கமிஷனர் கீ. இராமலிங்க முதலியார் B. A., குளித்தலை அரங்கசாமி ஐயர் B. A., ஆகிய இவர்கள் மூவரும் பேசினார்கள். ஒன்பதாம் சூத்திரத்தை ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் திண்ணிய மொழிகளால் உதாரண மேற்கோள்களுடன் பேசினார்கள். யாழ்ப்பாணம் சிவஸ்ரீ ச. குமாரசாமி குருக்கள் எழுதியனுப்



பிய ஒன்பதாம் சூத்திரக் கட்டுரை அச்சிட்டு வழங்கப்பட்டது. பத்தாவது சூத்திரத்தைப் பற்றித் துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரும் திருவையாறு வித்வான். சோமசுந்தர தேசிகரும் பொருள் நயம் கருத்து நயம் பொலிய எடுத்துப் பேசினார்கள்.

மாலை நான்கு மணிக்கு மறுபடி சபை கூடினதும் சென்னை சோமசுந்தரனார் அருந்தவச் சிறுமி மீனாட்சியம்மை மெய்கண்டார் அருளிய சிவஞானபோத மூலநூலை உரையோடு மனப்பாடமாக அழகாக உரைத்தது சபையோருக்கு உவகையுண்டுபண்ணியது. உத்திரமேரூர் பாடசாலை ஆசிரியர் ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளை எழுதியனுப்பிய 10, 11, 12 சூத்திரக் கட்டுரைகள் அச்சிட்டவை சபையில் வழங்கப்பட்டன. பதினோராவது சூத்திரத்தைக் காஞ்சி வச்சிரவேல் முதலியார் B. A., L. T. எடுத்துக் கம்பீர முறையில் சித்தாந்த நயங்களை விளக்கமாய் மொழிந்தார்கள். அதையொட்டியே ஜலகண்டபுரம் வரத நஞ்சைய பிள்ளையும் முதுமைப்பருவம் தோன்றாத நிலைமையிற் சொற்களை அடுக்கடுக்காக எடுத்துச் சைவ சமயப்பற்றோடு, சிவபெருமான் உலகை நடத்துவதுபோல் மகா நாட்டை, மகா சந்நிதானத்தில் நடத்திக் காட்டுவதாக உவமை கூறி, விளங்க வைத்தார்கள். திருவையாறு வித்வான் சுந்தரேசவாண்டையாரும் அச்சூத்திர நயங்களைப் பற்றிப் பேசினார். தேவகோட்டை பாலகவி இராமநாதஞ் செட்டியார் பன்னிரண்டாவது சூத்திரத்திற் கூறிய கருத்துக்களைத் தனது இனிய வசனங்களால் கேட்போர் மனங்குளிர எடுத்துரைத்தார்கள். ஈசுரமூர்த்தி பிள்ளையும் அச்சாகியிருக்கிற தன் கட்டுரையைத் தழுவிப் பேசினார்.

சென்னை சர்வகலாசாலைத் தமிழ்ப் பகுதித் தலைவர் இராவ்சாகிப் திரு. S. வையாபுரி பிள்ளை B. A., B. L., அவர்கள் எழுதி அச்சிட்டிருந்த சைவ சமயம்பற்றிய ஆங்கிலக் கட்டுரை வழங்கப் பெற்றது.

சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜக் காரியதரிசி திரு. ம. பாலசுப்ரமண்ய முதலியார் அவர்கள் எழுதியனுப்பியுள்ள ஆங்கில கட்டுரையைத் தழுவிச் செந்தமிழில் சித்தாந்த கருத்துக்கள் மனதில் படும்படி விந்யாசமாகப் பேசினார்.

சென்னை Queen Mary's College Physics Professor E. T. இராஜேஸ்வரி அம்மாள் எழுதிய ஆங்கிலக் கட்டுரை அச்சிட்டுச் சபையோருக்கு வழங்கப் பெற்றது. அதன் சாராம்சத்தைப் பற்றித் தலைவரவர்கள் சபைக்கு எடுத்துச் சொன்னார்கள்.

தலைவரவர்கள் முடிப்புரை கூறிப் பேரானந்தம் அடைந்தார்கள். சபை கலைந்து மறுபடியும் கூடியது. இரவு எட்டு மணிக்கு மேல் சென்னை திருப்புகழ் மணி பிரமஸ்ரீ T. M. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் இன்னிசைக் கருவிகளுடன் 'சிவகருணை' என்னும் பொருள்பற்றிச் சத்கதா காலக்ஷேபஞ் செய்தனர். எல்லோரும் கேட்டு இன்புற்றனர். தலைவர் சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் மகாநாட்டு முடிப்புரை கூறினார். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் ஆசி கூறி ஆசியுரை வழங்கப் பெற்றது. தேவார இன்னிசையில் சித்தாந்த மகாநாடு முடிவடைந்தது.

## திருமுறைத் திருவிழா நிகழ்ச்சிகள்

31-8-41 ஞாயிற்றுக்கிழமை :—காலை எட்டு மணிக்கு விழாவுக்குத் தலைவரான சைவத் திருமான் சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களை ஆதீனத் தேவார பாடசாலையினின்றும் வாத்தியத்துடன் மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்து வந்து வரவேற்புரை வாசித்துக் கொடுத்தபின் அவர் தலைமை பூண்டு தமது முன்னுரையில் திருமுறைகளின் சிறப்பையும் அது அமைந்த திருநாளின் விசேடத்தையும், திருமுறைகளில் அமைந்திருக்கும் அரும்பெரும் விஷயங்களையும் மற்றும் பல செய்திகளையும் அன்பு ததும்பவும் உளம் உருகவும் கேட்போர் சிரக்கம்பம், கரக்கம்பம் செய்யவும் அழகான மேற்கோளுடனும், இனிமையுடனும் எடுத்து மொழிந்து வியக்கச் செய்தனர். இடையிடையே தேவாரப் பாடல்கள் இசையுடன் பாடப்பட்டன. தலைவர் முன்னுரை நிகழ்த்து கையில் ஆதீனத்தாரால் வெளியிடப்பெற்ற நால்வர் சரித்திரம் யாவருக்கும் இலவசமாக வழங்கப்பெற்றது. பின்னர் அவர் தலைமையின் கீழ்ப் புலவர் பெருமக்கள் பன்னிருதிருமுறைகளையும் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஒவ்வொரு திருமுறைபற்றி அழகு பெறப் பேசினர். இவர்கள் திருவாளர்கள் சென்னை சச்சிதாநந்தம் பிள்ளை B. A., L. T., வையாபுரி பிள்ளை B. A., B. L., M. பால சுப்ரமண்ய முதலியார் B. A., B. L., (சைவசித்தாந்த மகா சமாஜக் காரியதரிசி), T. K. சிதம்பரநாத முதலியார் B. A., B. L., காஞ்சீபுரம் வச்சிரவேல் முதலியார் B. A., L. T., அரியலூர் தமிழாசிரியர் அ. சரவண முதலியார், ஜலகண்டபுரம் வரதநஞ்சைய பிள்ளை, தேவகோட்டை தனவணிகர் பாலகவி இராமநாதஞ் செட்டியார். M. அருணாசலம் பிள்ளை, M. A., சென்னை R. சண்முகசுந்தரம்



செட்டியார், K. சுப்ரமண்ய பிள்ளை, M. A., M. L., நாகப்பட்டணம் ஷண்முக தேசிகர் முதலானோராவர்.

இரவு 10 மணிக்குத் தலைவரவர்கள் சொற்பொழிவாளர்களின் திறமையையும், அவர்கள் பேசிய விஷயங்களின் அருமையையும், விளக்கியும் பாராட்டியும் பேசினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் மகாநாடு சிறப்புற நடந்தது பற்றிச் சிவபெருமான் திருவருளைப் போற்றி அதில் நிகழ்த்தப்பட்ட சைவ நற்சொற் பொழிவுகளைக் கேட்டதேயல்லாமல் சிந்தித்து நற்பயன் எய்துமாறு சபையோருக்கு ஆசி கூறினார்கள். பிறகு பொதுக் காரியதரிசி ஸ்ரீ மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மகாநாட்டுக்கு வந்து சிறப்பித்த அன்பர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்து, ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்படி மகாநாடு சிறப்புற நிகழ்ந்தமையையும், ஆதிமூர்த்திகளின் குருவருளையும், சொக்கலிங்கப் பெருமான் திருவருளையும் சிந்தித்துப் பிரார்த்தித்தனர்.

இதன் பின்னர் இரவு பதினொரு மணிக்கு நன்றாக அலங்கரிக்கப் பெற்ற வெள்ளிரதத்தில் ஸ்ரீ சமயாசாரியார் நால்வர் திருவுருவப் படத்தையும், ஆதீனத் திருமுறைச் சுவடிகளையும், எழுந்தருளுவித்து அரனடியார்கள் பின்தொடர, தமிழ் இசைமணி திரு. சுந்தர ஓதுவார் மூர்த்திகள், வேதாரண்யம் அருணாசல தேசிகர் முதலிய வெளியூர் ஓதுவார் மூர்த்திகளும் ஆதீன ஓதுவார் மூர்த்திகளும், தேவார பாடசாலை மாணவர்களும் தேவாரப் பண்களை இன்னிசை பொலிய இசைக் கருவிகளுடன் பாடிவர, எடுபிடி சாமான்கள் வரிசைபெற முன் செல்லத், திருவெண்காடு T. P. சுப்ரமண்யன் கோஷ்டி நாதசுர வாத்தியம் முழங்கத் திருவீதிகள் வலம் வந்து திருமுறைக் காட்சிப் புகைப்பட நிகழ்ச்சிக்குப் பிறகு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் திரு முன்னர் சிவக்கவி மணி C. K. சுப்ரமண்ய முதலியாரவர்கள் பன்னிரு திருமுறை விழாப் பெருமையை இனிதெடுத்து விளம்பியும், வேதாரண்யம் பிரதோஷ மடம் அதிபர் ஸ்ரீ சுப்பையா பட்டாரகர், சரக்கொன்றை மலர்க்கும் பஞ்சாக்ஷரத்திற்கும் பொருந்திய சம்பந்தத்தை அம்மலரைக் கொண்டே விளக்கிக் காட்டியும் முடிந்த பின்னர் சமயாசாரியர் திருவுருவப் படத்தையும் திருமுறைகளையும் திருக்கூட்டம் சூழ்ந்துவரத் தேவார இன்னிசைகளுடன் எழுந்தருளச் செய்து ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருச்சந்நிதானத்தைச் சார்ந்து ஆராதனை செய்து ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் யாவருக்கும் தம் திருக்கரத்தால்

திருவெண்ணீறு வழங்கினர். திருநந்தி தேவர் சிவபெருமானிடம் அருளிச் செய்யும்படி விண்ணப்பித்துக் கொண்ட பதினாறு பேறுகள் துண்டுப்பிரசுரம் வழங்கப் பெற்றது.

அன்பர்கள் அனைவரும் திருவருள் கவசமாக வணிந்து சிவபுண்ணியப் பெரும்பேறெய்தி இன்புற்றிருந்தனர். திருமுறை விழாவும் இனிது நிறைவேறியது. பொங்கு மங்களம் எங்கும் தங்குக. மெய்கண்டான் திருவடி வாழ்க.

**ஏற்பாடுகள் :**—தஞ்சை ஜில்லாவில் தருமபுரம் ஒரு சிறு கிராமம். மாயவரத்துக்கு ஈசான திசையில் காவிரியின் தென்பாலமைந்திருக்கிறது. நாற்புறமும் வளம்மிக்க நெல் வயல்களாலும் சோலைகளாலும் சூழப்பெற்றுளது. சாந்தமும் சீலமும் ஒருங்கே அமையப்பெற்றது. புலவர் பெருமக்கள் வருணிப்பது போலக் கயிலையாகத் திகழ்வது. மாயவரம் தரங்கம்பாடி கற்சாலையிலிருந்து இங்குபோக ஒரு கிளைப்பாதை அமைந்திருக்கிறது. ஊரின் மத்தியில் திலகமெனத் தருமபுரம் ஆதீன மடாலயம் அமைந்திருப்பது ஊருக்கு ஒரு கம்பீரத்தோற்றத்தை அளிக்கிறது.

மகாநாடு கூடுவதைப்பற்றி முன்னாடியே சுவர்ப் பத்திரிகைகள் மூலமும், துண்டு பிரசுரங்கள் மூலமும், ஆங்கிலம், தமிழ்த் தினசரிகள் மூலமும் பிரசித்தப் படுத்தப்பட்டிருந்தது. ஆயிரக் கணக்கானவர்களுக்கு நிகழ்ச்சிக் குறிப்பும், அழைப்பும் அனுப்பப் பட்டிருந்தது.

கற்சாலையிலிருந்து இவ்வூருக்குப் பாதை பிரியுமிடத்தில் ஒரு பெரிய வளைவு போடப்பட்டிருந்தது. அதில் பொன்னெழுத்துக்களில் மகாநாடு நடக்கும் செய்தி எழுதியிருந்ததும் தவிர,

"காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ ! இன்புற்றிட நாமினி யெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் சகத்தீரே"

என்னும் பாசுரமும் பொறித்திருந்தது சாலையில் போவோர் வருவோரை இம்மகாநாட்டைக் கண்டு களித்துக் கேட்டு இன்புறக் கூவி அழைப்பதுபோல் அமைந்திருந்தது. அதிலிருந்து மகாநாட்டுக் கொட்டகை வரையிலும் இருமருங்கிலும் மகரதோரணங்கள் கட்டப்பெற்றிருந்தன. நடுநடுவே தோத்திரப் பாக்களமைந்த வளைவுகள் அமைக்கப்பெற்றிருந்தன. மகாநாட்டுப் பந்தல் ஒலிமுகம் கயிலைக் கோபுரமோ என ஐயுறத்தக்க முறையில் அமைக்கப்பெற்றிருந்தது.



ஆதீன ஆதிஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஆலயத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியாக இருந்து கேட்க வசதி தரத்தக்கதாக ஒரு பெரும் கொட்டகை அமைக்கப் பெற்றிருந்தது. மகாநாட்டுக் கொட்டகையில் தொங்கல்களும் மேற்கட்டிகளும் விடப்பட்டிருந்ததும் தவிர விண்மீன்களெனத்திகழ் மின்னொளி விளக்குகள் அமைக்கப்பெற்றிருந்தன. சொற்பொழிவுகளை அப்பெரும் கூட்டத்தினர் நன்கு கேட்டு உணரத்தக்கதாக வேண்டியபடி இரண்டு இடங்களில் ஒலி பரப்பிகள் அமைக்கப் பெற்றிருந்தன. மகாநாட்டுத் தலைவர்கள் தங்குமிடங்களும், பெருநிலக் கிழார்கள், புலவர் பெரு மக்கள் முதலியோரும் ஏனையோரும் தங்க அவ்வவருக்கு வசதியான விடுதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு ஏற்ற முறையில் அலங்கரிக்கப் பெற்றிருந்தன. மகாநாட்டுக்கு வந்தோர் உணவருந்தப் போசனசாலைகளும் அமைக்கப் பெற்றிருந்தன. அவரவர் விருப்பின்படித் தங்கள் தங்கள் விடுதிகளிலும் சாப்பாட்டு விடுதிகளிலும் சிற்றுண்டி முதலிய ஆகாரங்கள் வழங்க ஏற்பாடாயிருந்தது. வேண்டுவோருக்குப் படுக்கப் பாயும் தலையணையுங்கூட வழங்கப்பட்டது. "சம்பந்தன் பதி மடத்தில் கவுளி உரைத்திடும் பதிபசுபாசப் பனுவலுமே" என்று கர்ணபரம்பரையாகத் திருமடத்தைப்பற்றிச் சொல்லும் செய்தி ஒன்று உண்டு. அதைப் பொய்த்து அவைகள் உயிருள்ளவைகள், உயிரற்றவைகளாகிய நாங்களும் பதிபசுபாசம் சொல்லவல்லேம் என்று மொழிவான்போலப் பந்தற் கால்களிலும், பிற இடங்களிலும் பாமரரும் அறிந்து கொள்ளும்வண்ணம் எளியநடையிலமைந்து சைவ நல்நீதிமொழி அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. இவைகளையெல்லாம் பார்த்த பெரியார் இந்நகரில் எங்கணும் சைவ மணமும் தமிழ் மணமும் வீசிக்கொண்டிருந்தன என்று சொல்லிக் கொண்டிருந்தது மிகையாகாததே.

வந்திருந்தோருக்குப் பல் துலக்க ஆல், வேல், பூலா, வேம்பு, முதலிய பற்குச்சிகளும், பற்பொடிகளும், தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்ய எண்ணெய், அரைப்பு முதலியனவும் வழங்கப் பெற்றதுடன் க்ஷவரம் செய்துகொள்ளுவோருக்கு நாவிதனும், துணி துவைக்க வண்ணானும், வெந்நீரில் ஸ்நானம் செய்வோருக்கெனத் தனியிடமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. வந்திருந்தோர் தங்கள் தங்கள் சொந்த வீட்டிற்கூட இவ்வளவு வசதிகளில்லை

யென்று சொல்லும்படியாயிற்று. பிற ஊர்களிலிருந்து வருவோர்க்கு வேண்டும் தகவல்கள் கொடுக்கத் தனியாகச் சிப்பந்திகளும் (Enquiry office) நியமிக்கப்பட்டிருந்தனர். மகாநாட்டுக்கு வருவோர் போவோருக்கு வண்டி, வாகனாதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

வீதிகளைத் தினமும் இருமுறை சுத்தம் செய்து தண்ணீர் தெளிக்கவும் இதர சுகாதார வசதிகளைக் கவனிக்கவும் வேண்டும் சிப்பந்திகள் நியமிக்கப்பட்டிருந்தனர். மகாநாட்டு மண்டபத்தில் நடுவே சந்தான முதற் குரவர் சிவஞான போத உபதேசம், ஸ்ரீ பொல்லாப் பிள்ளையார், சமயாசாரியர், ஸ்ரீ மெய்கண்டார் இவர்கள் திருவுருவப் படங்கள் அமைத்து வைத்திருந்தன. அதன் மத்தியில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் அடியார் குழாங்கள் சூழ எழுந்தருளி யிருந்தும், ஒருபுடை மகாநாட்டுத் தலைவர்கள், பிரசங்கிகள், மற்றொரு புறம் சிவசின்னங்கள் அணிந்து ஓதுவார் மூர்த்திகளும் மேடைகள் மீதும், சபையில் புலவர் பெருமக்களும், பெருநிலக்கிழார்களும், பெண்மணிகளும், மற்றையோரும் குழுமி இருந்தது, பார்க்கத் தெவிட்டாத கயிலைக்காட்சியாகவே நிகழ்ந்தது. பிரசங்கம் நடக்குங்கால் அவரவர் விருப்பம் தெரிந்து சுக்கு வெந்நீர், சுத்த ஜலம், நீர்மோர், சோடா, கலர் முதலிய பானவகைகள் கொடுத்துக் கொண்டே இருக்கவும் ஏற்பாடாகி யிருந்தது. வெப்பம் தெரியாதிருக்க அவரவர்க்கும் கைவிசிறிகளும் வழங்கப்பட்டன. இடையிடையே ஓதுவார் மூர்த்திகளாலும் ஆதீனம் தேவார பாடசாலைச் சிறார்களாலும் பண்ணிசை முழங்கப்பட்டது. இவ்வளவையும் கண்டவர்கள் ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதானம் செய்திருந்த ஏற்பாட்டையும் மகாநாட்டு வைபவத்தையும் கண்டும் கேட்டும், மகிழ்ந்து "நான் பெற்ற பேறு இவ்வையகமும் பெறவேண்டும்" என்று தாங்கள் தாங்களாகவே பேசிச் சென்றார்கள்.

இம்மகாநாட்டில் தலைமை வகித்த மூன்று பெரியார்களுடைய தலைமை யுரைகளின் சுருக்கம் அடுத்த இதழில் வெளிவரும்.

# THE SAIVA MUTTS

BY

Rao Sahib **S. Vaiyapuri Pillai,** B.A., B.L.,

[*Head of the Department of Tamil, University of Madras*]

THE peculiar characteristic of the religious life of the Tamil land, in the days of Nayanmars, was devotion, pure and simple. Temples were in existence in most of the important centres and these centres were sanctified by the devotional lyrics sung about them by the great saints. Devotees thronged in these centres and they vied with one another in offering worship. Personal services to the Deity, to the temple and to the devotees themselves formed the pith and marrow of religious life in that remote age. Second to these only, in importance, was the pilgrimage to religious centres and to sacred bathing ghats spread all over the country. The Shastras themselves were held in esteem, only so far as they insisted upon these religious practices. Very occasionally a dissentient voice was heard. Saint Appar denounces them and asks, in all righteous indignation, 'of what avail is the bathing in sacred ghats of the Ganges and the Kaveri ?'

But in course of time these religious practices became dry and meaningless. Their inward significance was lost sight of and they were followed more as a routine than as something elevating and noble. The shadow was considered the reality. The austerities degenerated into monkish exhibitions. In several instances, they served as convenient cloaks to cover a multitude of sins.

Such a degeneration could hardly be tolerated in any age. Our Siva Nayanmars themselves had to take note of this disgusting hypocrisy and they entered a strong protest against these empty observances. They insisted that, unless accompanied by a noble and truthful life, these observances, by themselves, were of no value. Purity in word, thought and deed was considered the soul of religious practice; and the moral tone which informed the system of practices gave it a new lease of life.

But even this ethical teaching became, as years went by, inadequate to sustain the religious practices and this was mainly due to the absolute want of any intimate and organic connection between ethics and religion. A philosophic basis was needed and this need became urgent and persistent, as the rival religious systems sought desperately to gain



such a basis. The Saivite religion had a vitality which was as strong as ever. It had a long history spreading through centuries, probably anterior in origin to the Aryan infiltration into the Dravidian India. This vitality asserted itself now and a satisfactory and comprehensive philosophic basis was the result. The glory of founding such a basis belonged to the Vellala philosopher Sri Meykandar who flourished in the beginning of the 13th century of the Christian Era.

There was one important factor which made the philosophic basis a reality. It was the search after a spiritual guide or Guru. No doubt we find frequent mention of this in the great mystic work of Thirumular. The zeal and earnestness with which these spiritual guides were sought after must have been staggering to the ordinary men of the world. But the spirit was there and it was unquenchable. It was held that, unless a person was properly initiated into the mysteries of religion, he could not hope for salvation. The many knotty points which must have caused endless troubles to such an earnest seeker of Truth, could only be satisfactorily elucidated by a Guru who had himself realised the Truth. And such a Guru—it was so believed—could only be God Himself in human form. This is the

Doctrine of Grace and it is beautifully illustrated in the life of the great saint and poet Sri Manikkavasaka. He must have flourished in the interval between Nayanmars and Nambi-Andar - Nambi, the hagio-grapher.

As a direct result of this doctrine of Grace and of the philosophical system founded by Sri Meykandar, the great Mutts in our presidency came into existence. The beautiful conception that lies at the back of these foundations and their long history of selfless work encourage us in our hopes that these Mutts have a glorious part to play in the future. They have not ceased to function in the interests of our society. The spiritual welfare of our people depends to a large measure on the direction and intensity of their activities.

May God guide the Heads of our Mutts in the right direction! May He bless all their activities!

139770

# சித்தாந்த சைவ வினு விடை

(மலர் - 14 - இதழ் 8 - 400-ம் பக்கத் தொடர்ச்சி)

**258.** மாயை யுலகத்தை யெப்படி சேட்டிப்பிக்கின்றது?

சூரியகிரணங்களை மேகங்கள் மறைக்குமாறு மனிதர்களுடைய ஞானக்கிரியைகளை மறைத்து நிற்கும். அன்றி மாயையானது பொய்ம்மையுண்டாக்குகிற போகத்தைப் பண்ணுவதாம். அசத்தியத்தைச் சத்தியமெனத் தோற்றுவித்துத் தன்னுடைய பிள்ளைகளாகிய தனுகரண புவனபோகங்களிடத்தி லுண்டான குணதோஷங்களைக் காட்டாமல் அசுசியை அசுசியெனக்காட்டாது மறைத்து நின்று நமதறிவை யியக்கும். அது சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயையென மூவகைத்து.

**259.** தனுகரணாதிகளை விளக்குக.

தனு-பஞ்சபூதங்களும் அவற்றின் காரியங்களும் உடன்கூடிய பூததேகம். கரணங்கள் - மனம் புத்தி சித்தம் அகங்காராதியுட் கரணங்களும் புறக்கரணங்களும். புவனம் - கன்மம் புசிக்கைக்குண்டான விடம். போகம் - புசிப்பாயுள்ள சப்த ஸ்பரிச ரூப ரச கந்த மெனும் விடயங்கள்.

## சுத்தமாயை

**260.** சுத்தமாயையின் இலக்கணமென்ன?

ஆணவ கன்மங்களுடன் கலவாது சுத்தகாரியப் பிரபஞ்சத்துக்கு முதற்காரணமாய் மயக்கஞ் செய்யாததாய் நித்தியமாய் வியாபகமாய் அருவாய் சடமாயிருப்பது. இது குடிலையெனவும் விந்துவெனவும் பெயர்பெறும்.

**261.** சுத்தமாயையில் தோன்றுவன யாவை?

நாதந்தோன்றும். அதில் விந்துதோன்றும். பின் சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை மூன்றும் ஒன்றிலிருந்தொன்றாகத் தோன்றும். இவ்வைந்தும் சிவதத்துவமென்றும் சுத்த தத்துவமென்றும் பிரோககாண்டம் என்றும் பெயர்பெறும். முறையே இத்தத்துவ கர்த்தாக்கள் சிவம்சக்தி சதா-

சிவம் மகேசுவரன் ருத்திரர்களாவார்கள். மேற்கூறிய விந்துவிலே சூக்குமை பைசந்தி மத்திமை வைகரியென்னும் வாக்குகள் நான்கும், ஐம்பத்தோரக்ஷரங்களும், எண்பத்தொருபதமும், சப்தகோடி மகாமந்திரங்களும், வேதாமக சாஸ்திர புராணங்களும், விஞ்ஞான பிரளயாகலருக்குத் தனு கரண புவனபோகங்களும், பதமுத்திகளும், பஞ்சகலைகளுந் தோன்றும்.

262. இச்சிவதத்துவங்களை முறையே விளக்குக?

நாதம் ஆன்மகோடிகளுக்கு அறிவையெழுப்பி ஞானமாய்ச் சிவனுக்கிடமாம். விந்து அவர்களுக்குத் தொழிலையெழுப்பிக் கிரியையாய்ச் சக்திக்கிடமாம். சாதாக்கியம் மேலிரண்டுங்கூடி ஞானமுங் கிரியையுமொத்து அனுக்கிரகத்துக்கிடமாம். ஈசுவரம் ஞானங்குறைந்து கிரியையேறித் திரோபவத்துக்கிடமாம். சுத்தவித்தை ஞானமேறிக் கிரியை குறைந்து சம்ஹாரத்துக் கிடமாம்.

263. சூக்குமாதி வாக்குகளின் செயல்களென்னை ?

சூக்குமை பரசரீரத்தினுள் நாதவடிவினதாய் நாபியடியாய் வந்து பொருந்தி வெவ்வேறாய்வரும் அக்ஷரங்களினுடைய சொரூபங்கள் தோன்றும் முறைமை தெரியாதபடி மறைத்து நிற்கும். மயில் முட்டைக்குள் சலமானது புறம்பே மயிலின் நிறமாய் சொரூபிகரித்துத் தோன்றி யுடைத்தால் ஜலமாய் விடுமாறுபோல.

பைசந்தி - நினைவுமாத்திரமாய் நிற்கும். வடிவு பிராணன். தானம் உந்தி.

மத்திமை-அக்ஷரங்களினுடைய சொரூபங்களைப் பிராண வாயுவோடுங்கூடி யொழுங்குபட நிறுத்திச் செவிக்கு விடயமாகாமல் ஆன்மாவினிடத்திலே யுள்ளறிவுமாய்த் தொனியுமுண்டாய் நெஞ்சுங்கண்டமுந் தானமாய்க்கொண்டு அக்ஷரங்களை யொலிப்பிக்குஞ் செயலில்லாது எழும்.



வைகரி - முற்கூறிய பிராணவாயுவோடுங் கூடிவந்து உதானவாயுவிலேயும் பந்தித்துச், செவிப்புலனிடத்தே கேட்கத்தக்கதாக நினைவிலுண்டான வசனத்தைச் சொல்லும். தானம் - தாலுமூலம்.

264. பரசரீரமாவது யாது ?

மும்மலமுடைய சகலர்கட்கு அசுத்தமாயையில் காரண சரீரமென்னுஞ் சரீரமொன்றுண்டு. இது ஆனந்தமயகோசமெனப்படும். வித்தியாதத்துவத்தில் பஞ்சகஞ்சுகமென்னும் பரசரீரமொன்றுண்டு. இது விஞ்ஞானமய கோசமெனப்படும். கலையிற்றோன்றிய அவ்வியக்த வியக்தரூபமாகிய குணசரீரமொன்றுண்டு. இது மனோமயகோசமெனப்படும். இவை மூன்றும் பரசரீரமாம்.

265. இவையன்றி வேறுசரீரங்களு முளவோ ?

சூக்ஷ்மம் ஸ்தூலமென இரண்டுண்டு.

266. அவற்றினை விளக்குக.

மனம் புத்தி அகங்காரம் தன்மாத்திரை ஐந்துங் கூடியது சூக்ஷ்மம். இது புரியட்டகம் எனவும் பிராணமயகோசமெனவும் படும். இப்போதுலகிலுலாவித்திரிவது ஸ்தூலம். இது அன்னமயகோச மெனப்படும்.

267. பூதனுசரீரம் யாதனுசரீரமென்பன யாவை ?

பிருதிவியாதி பஞ்சபூதங்களினால் ஆக்கப்பட்டது பூதனு சரீரமாகிய ஸ்தூலவுடல். மேலே கூறிய புரியட்டகம் ஆன்மாக்களின்ப துன்பங்கள் அனுபவிக்கும் அவசரம் யாதனு சரீரமெனப்படும்.

268. பூதசாரசரீரம் பூதசரீரமென்பன யாவை ?

புண்ணிய கன்மத்துக்கீடாக சுவர்க்க பலன்களைப் புசிப்பது பூதசார சரீரமெனப்படும். பாவபலத்துக்கீடாக நரக பலனை யனுபவிப்பது பூதசரீரமெனப்படும்.

269. விஞ்ஞான பிரளயாகலராவார் யாவர் ?

விஞ்ஞானகலர் மாயாகன்ம மலமற்றவர்கள். இவர்கட்கு ஈசனறிவுக் கறிவாயிருந்து முத்தியளிப்பன். பிரளயாகலர் - மாயாமலமற்றவர்கள். இவர்கட்கு ஈசன் மான்மழு சதுர்ப்புஜ காளகண்ட திரிநேத்திர தாரியாக பிரசந்நமாகி இரக்ஷிப்பன்.

270. பஞ்சகலைகள் யாவை ?

நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை யென்பவைகளாம்.

271. இவற்றினை முறையே விளக்குக ?

முதலாவது சங்கற்ப நிவர்த்திசெய்யும். இரண்டாவது நிவர்த்திசெய்த ஆன்மாவைத் திடப்படுத்தும். மூன்றாவது இத்தகைய ஆன்மாவினுக்குச் சர்வார்த்தஞானம் பிரகாசிப்பிக்கச் செய்யும். நான்காவது ராகத்துவேஷமின்றி யிருக்கச் செய்யும். மற்றையது மேல் நினைவுகளெல்லாம் கழிந்து சொரூபஞானமாய் நிற்கச்செய்யும்.

## அசுத்தமாயை

272. அசுத்தமாயையின் இலக்கணமென்ன ?

சுத்தமாயையின் கீழாயடங்கி ஆணவகன்ம மலங்களுடன் கலந்து சுத்தாசுத்த காரியபிரபஞ்சத்துக்கு முதற் காரணமாயிருப்பது. இது மோகினியெனப்படும். இது தனுகரண புவனபோகமெனும் நான்கு விதமாய் அவை நாலினுள் ஒன்றையொன்று ஒவ்வாமுறையினையுடையதாய் ஒருகாலும் அழிவில்லாததாய் கன்மம் புசித்து முடிந்துபோகும்படிக்கு ஏதுவாயுள்ள ஆன்மாக்களுக்கெல்லாந் தாரகமாய்ச் சலனமில்லாததாய் தன் காரியமாயுள்ள எல்லாந்தோன்றின அடைவிலேதானும் ஒக்கக் கூடிநின்று ஒடுங்கத்தக்கதாக வருகின்ற சம்ஹாரகாலம், அந்தக் காரியரூபத்தைப்பற்றி நின்ற ஆன்மாக்களுக்குத் தன்னிடத்தே பொருந்துகைக்கிடமாய்



அருவாய் ஜடமாய் சர்வவியாபகமாய் விளங்கும். இதில் காலமும் நியதியும் கலையும், கலையில் வித்தையும், வித்தையில் இராகமுந் தோன்றும் ; இவை பஞ்சகஞ்சுகமாம். இவற்றோடு கூடிய ஆன்மா பஞ்சகஞ்சுகனென்னப்படும்.

273. காலமென்பது என்ன ?

காலம், பருவம், சமயமென்னும் இவை யொருபொருட் பன்மொழி. அது இன்னவிஷயம் இன்னசமயத்திற் றொடங்கினது என்னும் இறந்தகாலத்தெல்லையையும், நிகழ்காலத்துப் பலத்தையும், எதிர்காலத்துப் புதுமையையும், பொருத்துவிப்பதொன்றும்.

274. நியதியென்பதென்ன ?

இன்னகாலத்தில் இன்னபோகம் புசித்தலென்றும் தீமை தண்டனை பயக்கும், நன்மை நன்மை பயக்குமென்றும் நிச்சயம் பண்ணும்.

275. கலையென்பதென்ன ?

ஆணவம் சிறிது சிறிதாக நீங்கும்படிக் கிரியையை எழுப்பிச் சுகதுக்கபோகமே ரூபமாகும் பலன்களைப் புசிப்பிக்கும்.

276. வித்தையென்பதென்ன ?

நமக்கு அறிவு பிரகாசப்படும் அவதரம்.

277. இராகமென்பதென்ன ?

கன்மத்துக்குத் தக்கவாறு பெற்றதைக் சிறிதாக்கி பெருதற்கு இச்சையுண்டாக்குவது.

278. மேற்கூறிய ஐந்து தத்துவங்களோடு கூடிய ஆன்மா எவ்வாறு பெயர்பெறும் ? அதின் செயலென்னை ?

புருடதத்துவமெனப் பெயர்பெறும். விஷயத்திலே யழுத்துவிக்கும்.

279. மேற்கூறிய மாயைமுதல் புருடனீறாகவுள்ள தத்துவங்களேழும் எவ்வாறு பெயர்பெறும் ?

வித்தியா தத்துவமெனப் பெயர்பெறும். இதற்குச் சுத்தா சுத்த தத்துவமென்றும் யோககாண்டமென்றும் பெயர்.

## பிரகிருதிமாயை

280. பிரகிருதி மாயை யாது?

அசுத்தமாயையின் தூலபரிணாமமாய் அசுத்தகாரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது. இதில் ஆன்ம தத்துவம் இருபத்து நான்குந் தோன்றும்.

281. ஆன்ம தத்துவங்கள் யாவை?

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் பூதங்கள் ஐந்தும், சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமென்னும் புலன்கள் ஐந்தும், மெய், நா, கண், மூக்கு, செவி யென்னும் பொறிகள் ஐந்தும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னுங் கன்மேந்திரியங்கள் ஐந்தும், மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்னும் அந்தக்கரணம் நான்கும், ஆகிய இருபத்துநான்கு மாம். இதற்கு அசுத்த தத்துவமென்றும் போக்கியகாண்ட மென்றும் பெயர்.

282. இவை தோன்றும் முறைமையை விளக்குக.

கலையிலே மூலப்பிரகிருதியுண்டாகி வியக்தாவியக்த மென இருவகைப்பட்டு முன்னதில் சாத்துவிக ராசத தாமத மெனுங் குணங்கள் மூன்றுந்தோன்றும். அவற்றுளொவ்வொன்று முத்திறப்படும்.

283. சாத்துவிக குணத்தின் தொழில்களென்னை?

தவம், கல்வி, சௌரியம், பொறுமை, கருணை, சந்தோஷம், அறிவு, அடக்கம் முதலியவாம்.

284. தாமத குணத்தின் தொழில்களென்னை?

கோள், அகௌரவம், நித்திரை, அதர்மம், அறியாமை, சோம்பல் முதலியவாம்.



285. இராசத குணத்தின் தொழில்களென்னை?

சௌரியம், உத்சாகம், அபிமானம், கொடுமை, வன்னெஞ்சு, இடும்பை முதலியவாம்.

286. அவ்வியக்தப் பிரகிருதியிலுண்டாவன யாவை?

சித்தமும் புத்தியுமுண்டாம். புத்தியிலகங்காரமும், அகங்காரத்தில் சாத்துவிககுண தைசத அகங்காரமும், ராசதகுண வைகரியகங்காரமும், தமோகுணபௌதாதி யகங்காரமும் தோன்றும். இவற்றுள் தைசதத்தில் மனமும் மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஞானேந்திரியம் ஐந்தும், வைகரியில் வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம், ஆகிய கன்மேந்திரியம் ஐந்தும், பௌதாதிகத்தில் சப்த ஸ்பரிச ரூப ரச கந்தம் ஆகிய தன்மாத்திரை ஐந்துந்தோன்றும். இவ்வைந்தினும் முறையே ஆகாசாதி பூதம் ஐந்துந் தோன்றும். ஆன்மா இவற்றினைப் பொருந்திக் கன்மம் புசிக்குமளவில் அவத்தைகளிற்றோய்வன்.

287. அவத்தை யெத்தனை?

காரணாவத்தை-3 காரியாவத்தை-15 ஆக-18.

288. காரணாவத்தையாவன யாவை?

கேவலம், சகலம், சுத்தமென மூன்றும்.

289. இவற்றினை முறையே விளக்குக.

சர்வசம்ஹாரகாலத்து ஆன்மாக்கள் சுத்த மாயாகாரணத்திலே யொடுங்கி சிருஷ்டிகாலமளவும் ஆணவமலத்தால் மறைப்புண்டு ஒன்றுமறியாமல் கிடக்குமவதரங் கேவலமாம். கண்ணு மிருளு மொக்கும். சிருஷ்டி காலந்தொடங்கி, சர்வ சம்ஹாரம் வருமளவும் ஆன்மாக்கள் தத்துவங்களுடன் கூடி எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதத்திலும் பிறந்திறந்துழலும் அவதரங் காரண சகலமாம். கண்ணும் விளக்குமொக்கும். இங்ஙனங் கேவல சகலப்பட்டுப் பிறந்திறந்துழலும் அவதரத் தாணவமலபாகம் வந்த ஆன்மாக்களுக்கு இருவினை

யொப்புஞ் சத்திநிபாதமும் உண்டாமாகையால் அந்த அவதாத்துச் சிவ ஞசாரிய மூர்த்தமா யெழுந்தருளி யிரக்ஷித்துத் தனது திருவருளால் ஞானத்தையுங் கடாக்ஷித்து நிஷ்டாபராக்கிப் பிராரத்தந்தொலைந்தவாறே தனது பூரணநிலையோடுங் கூட்டிக்கொள்ளும் அவதாஞ் சுத்தமாம். கண்ணும் இரவியும் ஒக்கும்.

290. காரியாவத்தை யாவை?

கேவலாவத்தையின் காரியமாகிய கீழாலவத்தை 5. சகலாவத்தையின் காரியமாகிய மத்தியாவத்தை 5. சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மலாவத்தை 5. எனப் பதினைந்தாம்.

291. கீழாலவத்தை யாவை?

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமென்னும் ஐந்தாம்.

292. சாக்கிரமாவது யாது?

ஆன்மா தத்துவம் முப்பத்தாறோடுங்கூடி விஸ்வவியாத்தனாய் நிற்கும்பொழுது அறிகருவிகளாகிய சிவதத்துவம் ஐந்தும் வித்தியாதத்துவம் ஏழில் பிரகிருதிதத்துவம் நீங்கலாக கலாதிகளாறும், ஆன்மதத்துவம் இருபத்துநாலில் பூதங்கள் 5-ம் ஆக 16-ம்,நீங்கலாகநின்ற கருவி 20-ம் புறக்கருவி 60-ல் வாயுக்கள் 10-ம் வசனுதி 5-ம், ஆக 35. கருவிகளோடுங்கூடி ஆன்மா கண்டத்துக்கு மேலதாகிய லலாடத்தில் நிற்குமவதாம் சாக்கிரமாம்.

293. புறக்கருவி 60 யாவை?

பிருதிவியின்கூறு - 5. (மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை) அப்புவின்கூறு - 5. (நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை) தேயுவின்கூறு - 5. (ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்) வாயுவின்கூறு - 5. (ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல்,நிற்றல்) ஆகாயத்தின்கூறு - 5. (குரோத, லோப, மோகம், மத மாச்சரியம்) பிருதிவியின் வழிநாடி - 10. (இடைகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, ஜிகுவை, அலம்புருடன், சங்குனி, வைரவன், குகுதை) வாயுவின்வழி நாடி - 10. (பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன்) ஆகாயத்தின் வழி ஈஷணுத்திரயம் - 3. (அருத்தம், புத்திரன், உலகம்) வாக்காதியின்றெழில் - 5. (வசன, கமன, தான, விஸர்க்க, ஆநந்தம்) பிரகிருதியின் வழிகுணம் - 3. (சாத்துவிக, ராஜச, தாமதம்) விந்துவின்வழி வாக்கு 4 - (சூக்குமாதி நான்கும்) ஆக புறக்கருவிகள் 60 ஆம்.

294. மேலே கூறிய கருவி 35 எவை?

ஞானேந்திரியம் - 5, கன்மேந்திரியம்-5, தன்மாத்திரை-5, அந்தக்கரணம் - 4, வாயு - 10, வசனுதி-5 ஆக கருவி 34 கூடி பிரகிருதி தத்துவ முடம்பாக சாக்கிரத்தில் ஆன்மா நிற்பன். சொப்பனதானத்தில் பிரவேசிக்கும்போது ஞானேந்திரியமும் கன்மேந்திரியமும் சாக்கிரதானத்திலேநின்றுவிடும்.

295. சொப்பனமாவது யாது?

கண்டத்தில் மேற்கூறிய வாயுவாதி யந்தக்கரணுந்த கருவிகள் - 24 கூடி பிரகிருதி தத்துவம் உடம்பாக நிற்குமவதரம். இவ்வான்மா சுழுத்தியிற் பிரவேசிக்கும்போது பிராணன் தவிர்ந்த 9-வாயுவும், வசனுதி 5-ம், சப்தாதி 5-ம், சித்தம் நீங்கலாக அந்தக்கரணம் 3-ம், ஆக 22 - கருவிகளுங் கண்டத்தில் நின்றுவிடும்.

296. சுழுத்தியாவது யாது?

இருதய ஸ்தானத்தில் பிரகிருதி தத்துவம் உடம்பாக பிராணவாயுவோடுஞ் சித்தத்தோடுங்கூடி ஆன்மா நிற்குமவதரம். துரியத்தில் செல்லும்போது சித்தம் சுழுத்தியில் நின்றுவிடும்.

297. துரியமாவது யாது ?

மூலாதாரத்துக்கு மேலாகிய துரியஸ்தானமாகிய நாபியிலே பிரகிருதி தத்துவம் உடம்பாக பிராணவாயுவோடுங்கூடி நிற்கு மவதரம். துரியத்தைவிட்டு துரியாதீதத்தில் செல்லும் போது பிராணவாயு துரியத்தில் நின்றுவிடும்.

298. துரியாதீதமாவது யாது ?

ஆன்மா ஆணவ மலமறைப்பாக பிரகிருதி தத்துவம் உடம்பாக மூலாதாரமாகிய அதீததானத்தில் ஜீவிக்குங் கருவிகளொன்று மின்றி அந்தப் பிரகிருதி யென்னத் தானென்னப் பிரிவற்றுக்கிடக்கும் நிலை.

299. சகலாவத்தையின் காரியமாகிய மத்தியாவத்தை யாது ?

இது சாக்கிர துரியாதீதம், சாக்கிர துரியம், சாக்கிர சுழுத்தி. சாக்கிரசொப்பனம், சாக்கிர சாக்கிரமென ஐந்து வகைப்படும்.

300. சாக்கிர துரியாதீதமாவது யாது ?

ஒருபொருளை மறந்தவன் அந்தப்பொருள் காணாத போது பிராணவாயுவும் இயங்காமல் மூர்ச்சித்திருந்த அவதரம். கருவி சிவதத்துவம்.

301. சாக்கிர துரியமாவது யாது ?

அந்தப் பிராணவாயு இயங்கத்தக்கதாகப் பெருமூச் செறிந்து விசாரித்தறிவோமென்று நின்ற அவதரம். கருவி சிவதத்துவம், சத்திதத்துவம்.

302. சாக்கிரசுழுத்தியாவது யாது ?

அவ்விடத்திலே யல்லவோ போனோமென்று நினை வெழுந்த அவதரம். கருவி - சிவதத்துவ சாதாக்கிய வடிவங்கள்.

303. சாக்கிர சொப்பனமாவது யாது ?



இன்னவிடத்திலே யல்லவோ அந்தப் பொருளை வைத்தோமென்று விசாரப்பட்டு அறிந்த அவதரம். கருவி - சிவசத்தி சாதாக்கிய ஈசுவர தத்துவங்கள்.

304. சாக்கிர சாக்கிரமாவது யாது ?

அந்தப் பொருளை வைத்தவிடத்திலே சென்று கண்ட அவதரம். கருவி - சுத்ததத்துவம் ஐந்தும்.

305. சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மலாவத்தை யாது ?

நின்மலசாக்கிரம், நின்மலசொப்பனம், நின்மலசுழுத்தி, நின்மலதுரியம், நின்மல துரியாதீதமென ஐவகைப்படும்.

306. நின்மல சாக்கிரமாவது யாது ?

ஆசாரியராலே ஞானதீக்ஷைபெற்று, பதி, பசு, பாச பதார்த்த திரயங்களினுண்மை யறிந்து சிந்தித்துத் தெளிந்து கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது.

307. நின்மல சொப்பனமாவது யாது ?

கருவிகள் நீங்கியும் நீங்காமலும் நடுவே சற்றுப் பதைப் புண்டாவது.

308. நின்மல சுழுத்தியாவது யாது ?

தத்துவம்நீங்கி மேலான கேவலந் தானாய் நிற்பது.

309. நின்மல துரியமாவது யாது ?

கேவலம் நீங்கி யருளினாலே தன்னையுங் கண்டு அருளையுங் கண்டு அதன் வசத்தாய் நிற்பது.

310. நின்மல துரியாதீதமாவது யாது ?

சிவத்தைத் தரிசித்துச் சிவானந்தத்தழுந்துதல்.

## மாயேயம்

311. மாயேயமாவது யாது ?

சுத்ததத்துவ சமூகங்களாம். இது ஆன்மாக்களுக்கு ஞானக் கிரியைகளை வெளிப்படுத்தும் பொருட்டும், தான்

செய்த வினைகளை யனுபவித்தொழிக்கும் பொருட்டும், தனு கரண புவன போகங்களோடும் பொருந்தி நடத்துவிக்கும்.

### திரோதாயி

**312.** திரோதாயியாவது யாது?

ஆணவமலம் நசிக்கும்படிப் பதியினுடைய அருட்சத்தியானது ஆணவ மலத்தோடுங்கூடி திரோபவித்து நின்று காரியப்படுத்தி மலபாகம் வருவித்த அருளானது அவர்களிடத்து கிருபை ஜனித்து பதியோடு இரண்டறப் பொருந்து முறைமையை யுண்டாக்குவதாம்.

**313.** மேற்கூறிய பாசபந்தங்களை நீக்குவித்து ஆட்கொள்ளும் ஆசாரியரை எவ்வாறடையலாம்?

“மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்-வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே” என்றபடி எத்துணையுஞ்சிறிய எம்பொருட்டு எளிவந்தருளிய எத்துணையும் பெரிய எமது அப்பனாகிய எந்திழைபாகன் ஏறுகந்தேறும் இறையவன் கொண்டருளிய அருண்மூர்த்தங்கள் அனைத்தையும் அன்புசெய்தலும், புண்ணியக்ஷேத்திரங்கள் பலவற்றிலும் வதிதலும், சிவதீர்த்தங்களிற் படிதலுஞ், சித்தசுத்தியை உண்டாக்கிக் கன்மமேறுமைக் கேதுவாதலால் ஆசாரியர் முத்தாத்மாவாவான் எவனெனத் தாமே தேடி வருவரென்பது உண்மைநூற் றுணிபாம்.

## 8. மூர்த்தியியல்

**314.** சிவபெருமானுடைய அருண் மூர்த்தங்கள் யாவை?

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆத்துமாவாகிய அட்டமூர்த்தங்களும் மகேசுரவடிவங்களாகிய லிங்கோற்பவர் முதல் கங்காதரமூர்த்தி ஈறாகவுள்ள இருபத்தைந்து மூர்த்தங்களும், பிரமன் முதல் சிவம் ஈறாகவுள்ள ஒன்பது மூர்த்தங்களும் சிவஸ்தலங்கள் பலவற்றுள்ளும் எழுந்தருளியிருக்கும் மூர்த்தங்களும், சிவபூஜை செய்யத் தக்க மூர்த்தங்களும் ஆம்.



**315.** மகேசுவர வடிவங்களெவை?

லிங்கோற்பவர், சுகாசனர், சக்திதரமூர்த்தி, கல்யாணசுந்தரமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், சோமாஸ்கந்தர், சக்ரவரதர், திரிமூர்த்தி, ஹரிஅர்த்தர், தக்ஷிணாமூர்த்தி, பிக்ஷாடனமூர்த்தி, கங்காளர், காமாரி, காலசம்ஹாரமூர்த்தி, சலந்தராரி, திரிபுராரி, சரபமூர்த்தி, நீலகண்டர், திரிபாதர், ஏகபாதர், பயிரவர், இடபாரூடர், சந்திரசேகரர், நடராஜமூர்த்தி, கங்காதரமூர்த்தி என்னும் இருபத்தைந்துமாம்.

**316.** லிங்கோற்பவமூர்த்தி யாவர்?

பிரம விஷ்ணுக்களுக்கு நல்லறிவுறுத்த அழற்பிழம்பாய் நின்ற சிவபெருமான் லிங்கரூபமாய்த் தோன்றியதே லிங்கோற்பவமூர்த்தியாம். இம்மூர்த்தியை உபாசிப்போர் சரீராதி சுகப்பிராப்தி யடைவர்.

**317.** சுகாசனமூர்த்தி யாவர்?

உமாதேவியாருக்கு வேதசிவாகமங்களின் உண்மையை சுகாசனத்திலிருந்து உபதேசித்த மூர்த்தியாம். இம்மூர்த்தியை உபாசிப்போர் சுகதுக்காதிகளில் விருப்புவெறுப்பின்றியிருந்து சங்கற்ப விகற்பங்கள் நீங்கப்பெறுவர்.

**318.** சக்திதர மூர்த்தியாவர்?

சிவபெருமான் பிரம விட்டுணுக்களுக்குக் கிருத்தியம் நடைபெறச் செய்யத் தமது வாமபாகத்திலிருந்து உமாதேவியாரைத் தோற்றுவித்த மூர்த்தியாம். இம்மூர்த்தியை உபாசிப்போர்க்குப் போகமுண்டாம்.

**319.** கல்யாணசுந்தர மூர்த்தியாவர்?

பிராட்டியார் பெருமானை நோக்கி, தமக்குள்ள தாக்ஷாயணி என்னும் பெயரை மாற்றவேண்டி மலையரையன் மக

வாய்த்தோன்றி, பார்வதியென்னுந் திருநாமத்துடன் மேனைபால்வளர்ந்து வருங்காலத்து எமது ஐயன் திருமணக்கோலங் கொண்டு எழுந்தருளிய மூர்த்தமாம். இம்மூர்த்தியை உபாசிப்போர் சதா மங்களகரமா யிருப்பர்.

320. அர்த்தநாரீசுவரர் யாவர் ?

இடப்பாதி பார்வதிதேவியாரும் வலப்பாதி பெருமானுமாக உள்ள திருக்கோலமாம். இம்மூர்த்தியை உபாசிப்போர் உலக இன்பத்தை யடைவர்.

321. சோமாஸ்கந்தமூர்த்தி யாவர் ?

உமையோடும் ஸ்கந்தரோடுங் கூடியிருக்கும் மூர்த்தியாம். இதனை உபாசிப்போருக்குப் புத்திரப்பேறுண்டாகும். (மூர்த்த நாயகர் என்றும் கூறுவதுண்டு).

322. சக்கரவாதர் யாவர் ?

திருமாலுக்குச் சக்கரமீந்த மூர்த்தியாம். உபாசகர் போகங்களை விக்னமின்றித் துய்ப்பார்கள்.

323. திரிமூர்த்தி யாவர் ?

ஈசுவரன் பிரம விஷ்ணு ருத்ரர்களைப் பிறப்பிவிக்கும் அவசரம் ஆம். ஆன்மாக்கள் அவஸ்தாத்திரயத்தை யடையச் செய்வது.

324. ஹரி அர்த்தர் யாவர் ?

ஈஸ்வரியின் வடிவம்பெற்ற விஷ்ணுவை இடப்பாகங் கொண்ட திருக்கோலம். புண்ணிய பாவங்களைச் சமானமாய்ச் செய்து அவரவர்களுக்குச் சத்திநிபாதங் கொடுப்பது.

325. தக்ஷிணாமூர்த்தி யாவர் ?

சிவபெருமான் தக்ஷிணதிசையை நோக்கி சநகாதி நால்வருக்கு உபதேசித்த அவசரம். யோகமுறைமையைக் காட்டினவர் யோக தக்ஷிணாமூர்த்தி யென்றும், தும்புருவர், நாரதர், சுகர் முதலியோருக்கு வீணையின் இலக்கணத்தை யுணர்த்தி அதனை வாசித்துக் காட்டினவர் வீணா தக்ஷிணா



மூர்த்தி யென்றும் கூறுவர் மேலோர். ஆன்மாக்கள் பிறவித் துன்பம் நீங்கி மோக்ஷபிராப்தி யடையும்பொருட்டு ஆசிரயிக்கிறது.

326. பிக்ஷாடனமூர்த்தி யாவர் ?

தாருகாவனத்து இருடிகள் சிவபக்தியில்லாராகிக் கன்மபிரமவாதிகளா யிருந்ததை மாற்றி அவர்களுக்கு நல்லுணர்வுண்டாக்கத் திகம்பரராய் பிரமகபாலம் கைக்கொண்டு பலியேற்கவந்த மூர்த்தம். பரிபாகமுள்ள ஆன்மாக்களுக்குப் போகசங்கிரகம் உண்டுபண்ணும்.

327. சரபமூர்த்தி யாவர் ?

சிவபெருமான் இரணியனைச் சங்கரித்த நரசிம்ஹத்தின் அகந்தையைச் சரபரூபமேற்று வதஞ்செய்தமையால் ஸிம்ஹஹக்னமூர்த்தியென்றும் சரபமூர்த்தியென்றும் பெயர் பெறுவர். ஆன்மாக்கள் கன்மாதிமல நீக்கமடையும்.

328. நீலகண்டமூர்த்தி யாவர் ?

சர்வசுதந்தரனாகிய பதி சிவபெருமான் என்றறியாது தேவர் முதலானோர் அமிர்தம்வேண்டித் திருப்பாற்கடலைக் கடைய, ஆலகாலம் பெற்றுச் சிவபெருமானிடத்திற் சென்று தங்கள் குறையிரந்துநிற்ப, அம்மைபாகனார் அவ்வாலகாலத்தையுண்டு தாமொருவரே இறப்பில்லாதவரென்று சூசிப்பித்தற்பொருட்டுக் கண்டத்திலடக்கிக்கொண்ட அவசரமேயாம். ஆன்மாக்களுக்கு ஆணவமலநீக்கமுண்டாகும்.

329. திரிபாதமூர்த்தி யாவர் ?

பிரளயத்தின் முடிவில் பிரம விஷ்ணு ருத்ரர்கள் மகேசுவரனிடத்தில் லயமாகும் அவசரமே திரிபாதமூர்த்தியெனப்படும்(இம்மூர்த்திக்கு இரண்டு சிரசும் நாலு கொம்பும் எழு புஜமும் மூன்று பாதமு முளவென அறிக). சரியை, கிரியை, யோகம் அனுஷ்டிக்கும்படி செய்யும்.

330. ஏகபாத மூர்த்தி யாவர்?

சிவபெருமான் சர்வசம்ஹாரகாலத்தில் எல்லாம் லயமடைய ஏகபாதமூர்த்தியாய் விளங்கும் அவசரம். ஞானபாதத்தினை யனுஷ்டிக்கச்செய்யும்.

331. பைரவ மூர்த்தி யாவர்?

இரணியாக்ஷன் குமாரனாகிய அந்தகாசுரசம்ஹாரத்தின் பொருட் டெழுந்தருளிய அவசரமாம். சர்வபந்தக நிவர்த்தி.

332. இடபாரூடமூர்த்தி யாவர்?

திரிபுரதகனகாலத்து விஷ்ணு, சிவபெருமானுக்குத் தருமதேவதை விடையாய் அநாதிதொட்டிருப்பதை யறிந்து, தான் அவ்விடைபோலாகி எம்பெருமானைத் தாங்கினர். அம்மால்விடையின்பேரில் ஆரோகணித்த மூர்த்தமே இடபாரூடமூர்த்தியாம். ஆசாரியன் பிரசாதிக்கவேண்டுமென்று திருவருள்கொண்டு வருவர்.

333. கங்காளமூர்த்தி யாவர்?

விஷ்ணு வாமனாவதாரத்தில் ஓரடியால் பூமியினையும் ஓரடியால் தேவலோகத்தினையும் அளந்து மற்றோரடிவைக்க இடமின்றித்தவித்து அகந்தைகொண்டு உலகையழிக்க முயலுகையில் சிவபெருமான் வச்சிரதண்டத்தால் வாமனனைச் சம்ஹரித்து முதுகெலும்பைக் கொண்டருளின அவசரமாம். இம்மூர்த்தியை உபாசிப்போர் வைராக்கியத்தை அடைவர்.

334. காமாரி யாவர்?

அம்மையாரைப் பிரிந்து அண்ணலார் பதார்த்தத்திரய போதகம் நால்வருக்குபதேசித்து நிட்டையிலிருந்த காலத்து உலகம் நடைபெறுதிருத்தலைத் தேவர்கள்கண்டு மதனையேவி புஷ்ப பாணம் அண்ணலார்பால் பிரயோகிப்பிவிக்க அண்ணலார் அநங்கனை அழலாக்கின திருக்கோலமாம். ஆன்மாக்களுக்கு மன்மதபீடை நிவாரணம்.

(தொடரும்)

# சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும் சிவாக்கிர யோகிகள் உரையும்

(மலர் - 14 - இதழ் - 8 - 416-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளுரைக்க; [1]உபாதான காரணம், சககாரிய காரணம், நிமித்த காரணம் என மூவிதமாம். அவைகள், கடாதிகளுக்கு உபாதான காரணம் மண்ணுண்டையும், சககாரி காரணம் திரிகையாதிகளும், நிமித்த காரணம் குலாலனுமாகப் பூமியினிடத்தில் கண்டோம். அதுபோல் அனுமிக்கில், கடாதிகளுக்கு மண்போலப் பிரபஞ்சத்துக்கு உபாதான காரணம் மாயையும், திரிகையாதிகளைப் போலச் சககாரி காரணம் ஈசுவரனுடைய கிரியாசத்திப் பிரேரிதமான காலமும், குலாலன்போல சர்வலோக பூஜ்யரான ஈசுவரன் நிமித்த காரணமாக அநன்னியமாக நின்று சகல பிரபஞ்சங்களையும் உண்டாக்குவன்.[2]

இக்கருத்தே "காலமும் கடவுளேவலால் துணைக்காரணம்" (30) என்றது. மண்போல என்னுமல் மண்ணென்றது ஆதிமுதல் வேற்றுமையிலொத்தல் என்ற பொருள். இவண்சொன்ன கர்த்தா சதாசிவேசுவரன் ஆஞ்ஞா பரிபாலகரான அனந்தேசுவரரை அசுத்த மாயா கிருத்தியத்திற்குச் சொன்னது.

தத் உக்தம்—

வாமாதி ஶக்தி ஸிர்யுக்த ஶிவேச்ஶா வியிசோதிதஃ|

விதியாராஜாயி ராஜேஶோ மாயாம் விக்ஷோஶியமந்த்ரராட்||-இதி.

---

[1]முதல் துணை நிமித்த காரணங்கள்.

[2]"சட்டிகுடஞ் சால்கலசந் தோண்டிசார் வாதியெனப்
பட்டஇவை தோன்றும் பதம்பண்ணில் - இட்டமுதல்
இந்தவிதந் தன்னை இலக்கியமண் ணின்தொழிலை
இந்தவியல் காரியமென் னும்.

குலாலன்தன் கைப்பற்றிக் கோலாற் சுழற்ற
உலாவுந் திகிரியதன் மேலுற் - றுலாவுமணும்
அந்தமணிற் கைத்தொழிலா லாக்குமவன் சாலாதி
இந்தவினை காரணமென் றெண்"

என்பன மறைஞான தேசிகர் காட்டும் மேற்கோள்.

## பிரபஞ்சத் தோற்றம்

மேல் ஒன்பது விருத்தத்திஞல் உபாதானத் திரயங்களினின் றும் காரியரூபப் பிரபஞ்சமுண்டாம்படி தொகுத்துக் கூறுகின்றது.

**விந்துவின் மாயை யாகி மாயையின் அவ்வி யத்தம்**
வந்திடும் விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடும் இராக மாதி முக்குண மாதி மூலம்
தந்திடும் சிவன வன்தன் சன்னிதி [1]தன்னில் அன்றே. 39

(உரை) விந்துவின்...வந்திடும் - விந்துவாகிய சுத்தமாயையின் அதோபாகம் அசுத்தமாயை. அவ் வசுத்தமாயையினிடத்து அவ்வியத்தமாகிற மகான் உண்டாம். இவ்வாறு விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவர்க்கும் தனுகரணாதிக் குபாதானமாகிய விந்து மோகினி மகான் மூன்றும் சித்தித்துள்ளளவில் இவையிற்றின் காரியமுண்டாம்படி சொல்லில்; விந்துத் தன்பால் வைகரியாதி முந்திடும் - விந்துவினிடத்தினின்று நாதாதி தத்துவங்கள் உதிப்பதற்கு முன்னே, வைகரிக்கு ஆதிகாரணமான சூக்குமை பைசந்தி மத்தியமை உண்டாம்; மாயை இராகமாதி தந்திடும் - மோகினியாகின்ற அதோமாயை இராக தத்துவத்திற்கு ஆதி காரணமான காரணமாயை; காலம் - நியதி - கலை - வித்தைகளைப் பெற்றிடும்;

"யாதன் உருபிற் கூறிற் றுயினும்
பொருள்செல் மருங்கில் வேற்றுமை சாரும்" (நன்னூல், 317)

என்பவாகலின், இராகமென்றதற்கு, இராகத்திற்கு என்று நான்கனுருபாகப் பொருளுரைக்கப்பட்டது.

மூலம் முக்குணமாதி தந்திடும் - மூலப் பிரகிருதியாகிற அவ்வியத்தம், சாத்துவிக இராசத தாமத குணங்கள் முதலிய ஆன்ம தத்துவம் இருபத்து நான்கையும் பெற்றிடும். பிரகிருதியினின்றும் புத்தி முதலாக ஒன்றிஞென்று தோன்றுவதைப் பிரகிருதி தருமென்றதும், கலையினுண்டான பிரகிருதியை மாயை தருமென்றதும்,

[1] தன்னினின்றே என்பது பாடம்.



காரியத்திற் காரணோபசாரலக்ஷணை. இவ்வுற்பத்திக் கிரமம் மேல் விரித்துக் கூறப்படும். இவ்வாறு உபாதானத் திரயங்களே பிரபஞ்சத்தை யுண்டாக்கில், கர்த்தா ஏதுக்கு என்னின்; சிவன் - சிவனே இவ்வுபாதானங்களினின்றும் காரியங்களை உண்டாக்குகிறவன். சிவனுகில், சிவன் கிரியாவானுவன் எனின்; அவன்றன் சன்னிதி தன்னிலன்றே - அச் சிவனது சன்னிதி மாத்திரத்திற் காரியப்படுவதாம்.

"[1]அன்றென் கிளவி ஆமெனத் தருமே" என்பது சூத்திரம்.

தத் உக்தம்—

ய஥ாக்ரோஜீ நசேஷ்டாநாம் ஸந்நியே ருபகாரகஃ||
தயாஸந்நியி மாத்ரேண விஜயாத்ய விலம்பிவஃ||—இதி.

விந்து மோகினி மகான் என்று மூன்று உபாதானமாகச் சொல்லுகிறது கற்பனுகௌரவம், மாயை ஒன்றே போதுமெனின், அப்படியன்று. சுத்தாத்துவாவுக்கு விந்துவே உபாதானமாக வேண்டும்; மிசிராத்துவாவுக்குப் பிரகிருதியே உபாதானமாக வேண்டும். அதெப்படி யென்னில், பருத்தி நூலிற் பட்டுப்புடைவையும் கோணியும் ஆகாததுபோல, மாயையிலே மிசிராத்துவாவொழிய சுத்தாத்துவாவும் அசுத்தாத்துவாவும் கூடாது.

இதற்குச் **சிவாத்துவைதவாதி** ஈசுவரனே சகத்துபாதான காரணமென்றும், **வாமாத்துவைதவாதி** சிற்சத்தியே சகத்துபாதான காரணமென்றும், **பாசுபதன்** மாயையே சகத்துபாதான காரணமென்றும், **நியாயவைசேடிகன்** பரமாணுவே உபாதான காரணமென்றும், **சாங்கியனும் பாஞ்சராத்திரியும்** பிரகிருதியே உபாதானகாரணமென்றும் சொல்லுவார்கள்.[2] அது கூடாது.

சுத்தாத்துவாவுக்கு விந்துவே உபாதான காரணம்.

[1]இச்சூத்திரம் எதிலுள்ளதென்று தெரியவில்லை; 51-ம் திருவிருத்த உரையில் "அன்றென் கிளவியும் இன்றென் கிளவியும், ஆமென் கிளவியும் ஆகு மென்ப" என்ற சூத்திரத்தை மறைஞான தேசிகர் மேற்கோளாகக் காட்டுகிருர்.

[2]இதன்பின், 'அருகன் அணுவே உபாதான காரணமென்பன்; புத்தன் பஞ்சகந்தமே காரணமென்பன்; உலகாயதன் காலு

தத் உக்தம் பௌஷ்கரே—

நமாயா நேஶ்வரோநாணூர் நஶக்திஶ் ஶுத்தி யிவர்த்மந:||
உபாதாநமதே ஸவிந்து: பரிஶேஷேண லக்ஷ்யதே ||
நாத்ரஶக்தி ருபாதாநஞ் சித்ரூபத்வாத் யதாஶிவ:|
மாயாவிநாத்ரோபாதாநம் மோஹகத்வாத் ஸ்வதேஜஸா || - இதி.

மேலும் சுத்தாத்துவாவுக்கு விந்துவே காரணமென்பதற்கு யுக்தி : பிரபுத்தராகிய விஞ்ஞான கலருடைய தனுகரணாதிகளுக்கு அசுத்த மாயை காரணமல்ல. விஞ்ஞானகலர் தேகேந்திரியாதிகளை யுடையவர்களாயினும், சிவானுக்கிரகத்தினாற் சர்வதாப் பிரபுத்தரே. அசுத்த மாயை கர்மானுகுணமான தனுகரணாதிகளை யுண்டாக்குவதாகையாலும், சுத்தாத்துவ வர்த்திகளாகிய விஞ்ஞான கலருக்குக் கரும மில்லாமையாலும் அவர்களுடைய தனுகரணாதிகளுக்குச் சுத்தமாயிருக்கிற விந்துவே காரணம். சுத்தம் அசுத்தம் என்று இரண்டேயாகலின், அசுத்தம் மாயையாகலின், சுத்தமென்று விந்துவைச் சொல்லுகையால் ஈசுவரனுக்குச் சமவாய சத்தியே எனின், அது சுத்தையானாலும், சடமுமாய் உபாதான காரணமுமாகையால், குலாலனுக்கு [1]மிருத் பிண்டம்போல, ஈசுவரனுக்குப் பரிக்கிரக சத்தியல்லது, சமவாய சத்தியல்ல.

இஃதன்றியும், அசுத்த மாயையை க்ஷோபித்து ஆன்மாக்களுக்குக் கன்மானுகுணமாகத் தனுகரணாதிகளை யுண்டாக்குகிற அனந்தேசுவரருடைய தனுகரணாதிகளுக்கு யாதொன்று காரணம், அது விந்து; அணுருத்திரரான பேர்கள் யாதொரு தனுகரணாதிகளினாற் பந்திக்கப்படுகிறார்கள், யாதொரு தனுவாதிகளை விடப் பரமமுத்தியை யடைகிறார்கள், அத்தனுகரணாதிகளுக்கு உபாதானம்

பூதமே காரணமென்பன்' என்று சில பிரதிகளில் காணப்படுகிறது. இவ்விடத்து மாயையின் பேதங் கூறியது மாயை உண்டென்பவர்க்கேயாதலால், இம்மூவரையும் சேர்த்துச் சொல்லுவது யுக்தமன்று.

[1]மிருத்து - மண்.

17 SEP 1941



விந்துவே. ஈசுவரனுடைய லயபோகாதிகாரங்கள் யாதொரு உபாதியிலுண்டாயிற்று, அதுவும் விந்துவே.

ஆகையால், சுத்தாத்துவாவுக்கு விந்துவே உபாதானகாரணம்; மிசிராத்துவாவுக்கு அசுத்த மாயையே உபாதான காரணம்; அசுத்தாத்துவாவுக்கு மாயா ஜன்னியமான பிரகிருதியே உபாதான காரணம். ஆகையால், விந்து மோகினி மகான் என்னும் உபாதானத் திரயமும் [1]அங்கீகாரியமே.

தத் உக்தம் தத்ரைவ—

யதஃப்ரவ்ருத்திய புங்காய: கரணாந் நாந்ந காரணம் |
ஶுத்தியாயிவ வர்திநஸ்ஸர்வே ப்ரவ்ருத்யா ஶிவதேஜஸா ||

தேஹேந்த்ரியாதி மந்தோபி நவாஜாஸ் தேஷுதேபுந:|
கிஞ்சகர்மாந் விதாஸ்ஸர்வே புல்ஹலாஶ் ஶுத்தவர்த்மநி ||

கதம்கர்மாநு ஸாரேண மாயா பரிணதாஸதீ |
தேஷாம்தேஹேந் த்ரியாதீநாம் உபாதாநம் பவேத்விஜா:||

தஸ்மாத்ஶுத்தாயி வநஸ்சாஸ்ய ஸ்வாநு கார்யேவ காரணம் |
இஷ்யதாங் குண்டலீநாவீயம் ஶுத்தமேதத் த்விஜோத்தமா:||

ஸாசகுண்டலிநீ ஶம்போஶ் ஶக்திஶ்ஶுத்தா ஜடாத்மிக |
நதாதாத்ம்யாஸ்திதா கிந்து வர்த்மாநா பரிக்ரஹே ||

ஶிவேகர்தரி தாதாத்ம்யாந் நோயம் குண்டலிநீஸ்திதா |
உபாதாநம் த்வதோ ஹேதோ: குலாலே ம்ருத்திகாயதா ||

கிஞ்சமாயா த்ருபாதாந தேஹேந்த்ரியவதாம் ந்ருணாம் |
க்ஷுத்ரவீயம் கார்யகாம் தஸ்ய கர்துர்தேஹேந் த்ரியாத்மகம் ||

யதுபாதாநதோ ஜாதம் ஸவிந்துரிதி ஹம்யதாம் |
கிஞ்சருத்ராணவோயேந பத்த்யந்தே யத்ரவாஸ்திதா:||

[1]அங்கீகார்யம் - உடன்பாடு.

விமுச்யந்தே யதோவாயம் ஸவிந்து ஈரிதி ஹம்யதாம் ।
லயாதி ஹேதுப்ராஹுக்தோ யதுபாயௌ ஶிவஸ்யது ॥
ஸவிந்து ஈரிதி மந்தவ்யஸ் ஸைவ குண்டலிநீ மதா ॥—இதி. ௧௯

## வைகரி வாக்கு

மேல் [1]தூலாருந்ததி ந்யாயேந வைகரி முதலான வாக்குக்கள் நான்கினையும் தரிசிப்பிக்கின்றது.

**வை**கரி செவியிற் கேட்ப தாய்அத்த வசன மாகி
மெய்தரும் உதான வாயு மேவிட விளைந்த வன்னம்
பொய்யற வடைவு டைத்தாய்ப் புந்திகா ரணம தாகி
ஐயமில் பிராண வாயு அடைந்தெழுந் தடைவு டைத்தாம். 40

(உரை) வைகரி வாக்கானது பிறர் செவிக்குக் கேட்பதுமாய், தேகத்தில் உதான வாயுவுடனேகூடித் தூலாட்சர வியாத்தியாய், புத்தியினால் வர்ணானுசந்தான ரூபமாக நிச்சந்தேகமாய், பிராண வாயுவுடனேகூடி அர்த்தத்திற்கு வாசகமுமாய், வசனிக்கிறவனுக்கு உபகாரத்தைப் பண்ணுவதுமாயிருக்கும்.

தத் உக்தம் பௌஷ்கரே—

வைகரீ ஶ்ரோத்ரவிஷயா ஸ்தூலவர்ண பரிக்ரஹா ।
ஸ்தாநேஷ்வபி யுதேவாயௌ ப்ரயோக்துருபகாரணீ ॥
புத்த்யா வர்ணாநுஸந்தாந பூர்வமர்த்தஸ்ய வாசிகா ।—இதி. ௨௦

## மத்திமை வாக்கு

**உ**ள்ளுணர் ஓசை யாகிச் செவிதனில் உறுதல் செய்யா(து)
ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடைய தன்றித்

[1]தூலாருந்ததி நியாயம் - நுண்மையான அருந்ததி நட்சத்திரத்தைக்காட்ட அதன் அருகிலுள்ள பெரிய நட்சத்திரத்தைக்கொண்டு குறிப்பிடுவதுபோல, நுண்பொருளை விளக்குவதற்கு அதன் சம்பந்தமான பருப்பொருளைக்கொண்டு குறிப்பிட்டு உணர்த்துவது என்னும் நியாயம். நியாயேந - நியாயத்தினால்.



தெள்ளிய அக்க ரங்கள் சிந்திடுஞ் செயல தின்றி
மெள்ளவே எழுவ தாகும் மத்திமை வேற தாயே. 41

(உரை) மத்திமை வாக்கானது, இவ்வைகரி வாக்கிற்கு அன்னியமுமாய், பிறர் செவிக்குக் கேட்கப்படாமல் அந்தர்க்கதமான சத்தத்தையுமுடைத்தாய், வர்ணானுசந்தானமு மின்றி, பிராணவாயு விருத்தியுடன் கூடாததுமாய், மந்த சுவாசத்தை யுடையதுமாயிருக்கும்.

தத் உக்தம் தத்ரைவ—

ப்ராணவ்ருத்தி மதிக்ராந்தோ வாஹோஷமத்யமாஹ்வயா ।
வர்ணரூபாநு ஸந்தாந விரஹாந்தஸ் ஸமுஜ்வலா ॥—இதி. ௨௧

## பைசந்தி வாக்கு

**வே**ற்றுமைப் பட்ட வன்னம் வெவ்வேறு விபாக மாகித்
தோற்றுதல் அடைவொ டுக்கிச் சோயம்பிர காச மாகிச்
சாற்றிடும் மயிலின் அண்டம் தரித்திடும் சலமே போன்றங்(கு)
ஆற்றவே உடைய தாகிப் பைசந்தி அமர்ந்து நிற்கும். 42

(உரை) அந்நுவயம்: வேற்றுமைப்பட்ட வன்னம்...ஒடுக்கி, சாற்றிடும் மயிலின் அண்டம்...போன்று சோயம்பிரகாசமாகி, ஆற்றவே...நிற்கும் - நீலாதியாகிய பல வர்ணங்களையும் வெவ்வேறாகக் காண்பிப்பதன்றி, மயூராண்ட ஜலமானது ஏகரசமாக நின்றதுபோல, பைசந்தி வாக்கானது, [1]ஏகபஞ்சாசத் வர்ணத்தினுடைய பேதத்தையும் கிரமத்தையும் அடக்கிக்கொண்டு, விஞ்ஞானப் பிரகாசமாய், மேல் மத்திமை வாக்கிற்குக் காரணமுமாய்ப் பிராணவாயுவுடனே கூடி உத்தானமின்றி நிற்கும்.

தத் உக்தம்—

மயூராண்ட ரஸோபந்நிர் விஶேஷாந்தர்யு யாரிகா ।
பஶ்யந்திவாஹி யஜ்ஞேயாத்ர த்ரியாபிவஶாஸநம் ॥—இதி. ௨௨

[1]ஐம்பத்தொரு அக்கரங்களின் பேதத்தையும்.

## சூக்குமை வாக்கு

சூக்கும வாக்க துள்ளோர் சோதியாய் அழிவ தின்றி
ஆக்கிடும் அதிகா ரத்துக் கழிவினை தன்னைக் கண்டால்
நீக்கமில் அறிவா னந்தம் முதன்மைநித் தியமு டைத்தாய்ப்
போக்கொடு வரவி ளைப்பும் விகாரமும் புருடன் இன்றாம். 43

(உரை) சூக்கும...இன்றி - சூக்குமை வாக்கானது அந்தர்க்கதமாய், விஞ்ஞானப் பிரகாசமாய்த் தன்னுடைய காரிய விருத்தியான பைசந்தி மத்திமை வைகரி என்னும் மூன்று வாக்குக்களும் ஒடுங்கின காலத்துந் தான் ஒடுங்குவதின்றி நிற்கும் ஆன்ம ஞானக்கிரியாப் பிரதிபந்தகமான ஆணவ மல நிவர்த்தியுடனே நிவர்த்தியாகையால் தானே ஆன்மாக்களுக்குப் பரமான பந்தமுந் தன்னுடைய நிவிர்த்தியே பரமான மோட்சமுமாகப் பிரத்தியான்ம நியதமுமாய் நிற்கும்;

தத் உக்தம்—

ஸூக்ஷ்மா சிதேகரூபா நிவ்ருத்தா ஶேஷவ்ருத்திகா ।
ஆஸீயோ நபரமோ பங்ய ஆஸீயோ முக்திஸ்துநாபரா ॥
தந்நிவ்ருத்யவிநாஶோதா த்ருக்க்ரியா வாரகோயத ।—இதி.

தன்னைக் கண்டால் அதிகாரத்திற் கழிவினை ஆக்கிடும், புருடன் இன்றாம், போக்கொடு வரவிளைப்பு விகாரமும் இன்றாம், நீக்கமில் அறிவு ஆனந்தம் முதன்மை நித்தியமுடைத்தாம் என மாற்றுக. இச்சூக்கும வாக்கிற்கு அன்னிய ஆன்மாக்கள் தங்களைக் காண்பது அருமை. குருகடாட்சத்தினாற் கலாசோதனை பண்ணப்பெற்ற ஆன்மாவானவன் சூக்கும வாக்கிற்கு அன்னியமாகத் தன்னைக் கண்டாற் போகாதிகாரத்திற் கழிவினை யுண்டாக்கும். அவ்விடத்துப் [1]பும்ஸ்துவ மலநிவர்த்தியாகையால் ஆன்மாவுக்குப் புருடனென்னும் பெயரில்லையாம்.

[1]பும்ஸ்துவமலம் - அவிச்சை, ஆங்காரம், அவா, ஆசை, கோபம் என்னும் பஞ்சக்கிலேசம்.



ஆன்மாவைக் கஞ்சுகம்போல ஆவரித்து ஏகதேச விருத்தி பண்ணிக்கொண்டு திரியும் பும்ஸ்துவமலம் போகையால் ஜனன மரணமும் அதனாலுண்டான பிராந்தியும் விகாரமும் இல்லையாம். இது அநிஷ்ட நிவிருத்தி. நையாயிகரைப்போல் ஆத்தியந்திக துக்க சம்சேதமே மோக்ஷமென்பதன்றி, சைவ சித்தாந்தத்திற்குச் சுவதந்திரத்தையும் ஞானானந்தானுபவமாகிற இஷ்ட வியாப்தியும் உண்டென்பதனால் நிரபேக்ஷ சர்வஞ்ஞதையும் பரமான சுவானுபவமும் சுவாதந்திரியமும் நித்தியதையும் உண்டாம்.[1]

தத் உக்தம் தத்ரைவ—

விவிக்தா அங்வதேதேஹ்யூம் புல்ஹலாஸ்த்வாங்நகுத்ரசித் ।
ஸ்வரூப ஜ்யோதிரேவாந்த ஸூக்ஷ்மம் வாஹநபாயிநி ॥
யஸ்யாம் த்ருஷ்டஸ்வரூபாயாம் அதிகாரோ நிவர்ததே ।

[1]“ அநாதிமுத்த சின்மயநோக் கால்நாத மாகும்
மநாதிசுத்த மாயையினுன் மாக்கள் - மநாதியினை
யாக்கப் புனிதமந்த நாதத்தாம் விந்துவினும்
வாக்கொருநான் கென்றார் மதித்து.

சூக்குமைநம் பைசந்தி மத்திமைசொல் வைகரிஎன்
றாக்கு மிவற்றின்பேர் அடைவறிக - சூக்குமைதான்
பந்தித்தான் மாவுணர்வைப் பைசந்தி மத்திமையாம்
அந்தத்திற் றாலவெழுத் தாம்.

வாக்கி னுதித்துப் பொருளை மதிப்பிக்கைக்
காக்கும் பதத்தி னவயவமாய் - வாக்கியமாய்ப்
பாவா யியலாகி நூலாய்ப் பரந்திலங்கும்
ஓவாதே மத்திமையின் உற்று”

என்பன மறைஞான தேசிகர் காட்டும் மேற்கோள்.

அர்யத்ராபி—

ஹித்வாயம் ஞேயவஸ்ரேக நிர்ஹ்ச்ஹத்யவிஸங்கித:|
கேவலம் பரமாநந்தோ ஸ்ரோ நித்யோ ஜிதப்ரஹ:||

நாஸ்தமேதி நசோதேதி நஸ்ராந்தோரவிகாரவாந் |—இதி. ௨௩

## வாக்கு நான்கும் சீவிக்கும் முறைமை

நிகழ்ந்திடும் வாக்கு நான்கும் நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடும் ஐந்த தாகச் செயல்பரி ணமம் அன்று
புகழ்ந்திடும் விருத்தி யாகும் படங்குடில் ஆறைற் போல
மகிழ்ந்திடும் பிரம மன்று மாமாயை என்பர் நல்லோர். 44

(உரை) நிகழ்ந்திடும் வாக்கு...ஐந்ததாக-முன் சொன்ன வைகரியாதி வாக்கு நான்கும் நிவிர்த்தாதி கலைகளுடைய சொரூபமாகக் கொண்டு ஐந்து பேதமாய்த் தத்தத் (= அந்தந்த) கலாவாசிகளுக்கு அவ்வாறே தாரதம்மியமாகச் சத்தார்த்தப் பிரகாசகமா யிருக்கும்[1];

தத் உக்தம் பௌஷ்கரே—ஸைஷா சதுர்விதா வ்ருத்தி நிவ்ருத்யாதி கலாஸ்ரயாத் | பஞ்சதா ஹிதிதேஹிய - இதி.

காலோத்தரே ச—

ஸாந்திர்வித்யா ப்ரதிஷ்டாச நிவ்ருத்திஸ் ஹேதிதா:கலா:
வாக்ஹக்திரூபா: ப்ராண்யந்த தத்வாதாராம்ஸ்ச ஸம்ஸ்திதா ||
—இதி.

ம்ருகேந்த்ர வ்ருத்தௌ—ஸைஷா ஸவாதிகாவிந்த வ்ருத்தி நிர்வ்ருத்யாதிகலா ஸ்ரயாணும் ஆத்மநாந்தரதம் ஹாவேந பஞ்ச யஜ்ஞாநோபகாரீ கேத்யர்த்ய—இதி.

[1] நிவிர்த்திகலா புவனவாசிகளுக்கு மிகவுந் தூலமாயும், பிரதிட்டாகலா புவனவாசிகளுக்குத் தூலமாயும், வித்தியாகலா புவனவாசிகளுக்குச் சூக்குமமாயும், சாந்திகலா புவனவாசிகளுக்கு அதிசூக்குமமாயும், சாந்தியாதீதகலா புவனவாசிகளுக்கு அதிசூக்குமதரமாயும் சீவியா நிற்கும்.



செயல்...ஆறைற்போல - இவ்வாக்கானது விந்துவின் [1]பரிணமமல்ல. பரிணமமாகிய க்ஷீரம் (பால்) ததியாய் (தயிர்), ததி தக்ரம் (மோர்) ஆறைற்போல, விந்துவுக்கு நித்தியதை யில்லாமற் போய்விடும். போகில், புநஸ் ஸ்ருஷ்டி யுண்டாகாது. ஆகையால், புடைவையே கூடாரமானதுபோல, இந்த வாக்குக்கள் விந்து விருத்தி ரூபமே.

தத் உக்தம் பௌஷ்கரே—

ஸவிகல்பம் விஜாநாமித் யவபோயோஹியாநத:|
வ்ருந்தரேவமதா பிந்தோ: படஸ்யேவ குடீதத ||—இதி.

மகிழ்ந்திடும்...நல்லோர் - இவ்வாக்கு விந்து விருத்தி என்று சொல்லவேண்டுவதில்லை, பரமான்மாவே வாக்குரூப மென்றும் வாக்கே பரமான்மாவென்றும் சுருதியார்த்தங்கள் கேட்கப்படுகையினுற் சத்தம் பிரமமே எனின், பரமானந்த சொரூபமாயுள்ள பிரபஞ்சத்திற்குச் [2]சமவாயிகாரணமன்று. அஃது எவ்வாறெனின், வாக்கானது விகாரியாகையினாலும், சடமாகையினாலும், பிரதிபுருடநியதமாக அனேகமாகையினாலும், பிரமமும் விகாரியும் சடமும் அனேகமுமாய் விடுமாகையால், மகாமாயையே வாக்கு விருத்திக்குச் சமவாயிகாரணமென்று பெரியோர் சொல்வார்கள்.

தத் உக்தம் தத்ரைவ—

பரமாத்மைவ வாஹாத்மா வாகேவாத்மேதிச ஸ்ருதே:||

இது பூர்வ பட்சம். மேல் சித்தாந்தம்.

—நஹ்யகாரணா ஸவா ஸம்ஹவேயு: கதாசந |
தேஷாம் யத்காரணம் விப்ராஸ் ஸவிந்து ரிதி ஹம்யதாம்||—இதி.

[1] "வாளாகை தாளாகை பரிணமம் மண்ணிற்
பீளமுளை யாதி பெறும்."

[2] சமவாயிகாரணம் - முதற்காரணம்.

## சுத்தாத்துவாக்களுக்கு வயிந்தவம் முதற்காரணம்

மேல் விந்து உபாதான காரணமாய்க் காரியப்பட்டுத் தத்துவ தாத்துவிகங்கள் உண்டாவது இந்நான்கென்று உணர்த்துகின்றது.

**வி**த்தைகள் வித்தை யீசர் சதாசிவர் என்றி வர்க்கு
வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கள் மந்தி ரங்கள்
தத்துவம் சரீரம் போகம் கரணங்கள் தாம்எ லாமும்
உய்த்திடும் வயிந்த வந்தான் உபாதான மாகி நின்றே. 45

(உரை) [1]வன்னம் பதங்கள் மந்திரங்கள் வித்தைகள்...வைத்துறும் தத்துவம் ரீரம் கரணம் புவனம்போகங்கள் தாம் எலாமும் வயிந்தவந்தான் உபாதானமாகி நின்றே உய்த்திடும் என்மாற்றுக. வர்ணங்களும் பதங்களும் மந்திரங்களும் மந்திரேசுவரர் மந்திரமகேசுவரர் அணுசதாசிவாதிகளுக்கு அதிட்டானமான தத்துவங்களும் சரீரங்களும் கரணங்களும் புவனங்களும் போக வஸ்துக்களும் சுத்த மாயையாகிற விந்து உபாதானமாகி நின்று ஈசுவரசத்திப் பிரேரகத்தினால் உண்டாக்குவதாம்.

எல்லாமென்றது, இராகாதி தத்துவமில்லாதபோது போகம் கூடாதாகையால், அசுத்தாத்துவாவிலே போலச் சுத்தாத்துவாவினும் காலம் நியதி கலை வித்தை இராகம் புருட தத்துவம் அந்தக்கரணங்கள் ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்கள் எல்லாம் உண்டென்றது.

தத் உக்தம் பௌஷ்கரே—

அத்வாயம் ஹோத்ரு உதிஷ்டோ ஹோமோராத்ராதி ஸ்யதிதஃ ।
அதஸ் தேஷாமஹாவேந கயம் ஹோமோ மஹேஸ்வர ॥

[1]வித்தைகள் - மந்திரேசுவரர்; வித்தையீசர் மந்திரமகேசுரர்; சதாசிவர் - அணுசதாசிவர்; இம்மூவரும் அபரமுத்தர்கள். பதங்கள், வன்னங்கள் முதலியன சுத்தாத்துவாக்கள். வயிந்தவம் - விந்துவிலே தோன்றியது; சுத்த மாயா காரியமானது. வர்ணங்கள் - அக்கரங்கள்.



அத்ராபி காலமுக்யாநி யதோயதா - நிந்துதாம்பத்ர ஸாதநாநி வைசித்ர்யாணி ஜீவிஜோத்தமா ॥—இதி.

ஆனால், கலாதிசம்பந்த முண்டாகையினாலே இவர்களும் சகலரே என்னில், விஞ்ஞானகலர்க்குக் கலாதி சம்பந்தமுண்டாயிருந்தும் கலாதி பாதந்திரரல்லாத படியால் அகலரே.

தத் உக்தம் தத்ரைவ—

கலாதிதத்வ ஸம்யோகாத் ஸகலத்வ மனோஸ்யிதம் ।
தேஷாமத்ராபி ஸத்பாவே ஸகலா அகலாத்அபி ॥

தேஷாம்கலாதி யோகேபி பாரதந்த்ர்யம் க்ருதம்நதை ஃ।
விஜ்ஞாந கேவலாஸ்தஸ்மாத் ஸகலா அகலாதபி॥—இதி.

இவ்விடத்து, போகமாவன, இரத்தின கசிதமான கிரகாதிகளும், [1]சிருக்கு சந்தன வனிதாதிகளும் சர்வமும் அசுத்தாத்துவாவிலேபோலச் சுத்தாத்துவாவினும் சுத்தமுமாய் திவ்வியமுமாய்த் துக்கலேச வர்ஜிதமுமாய் தீக்ஷையினால் இவண் யோசிக்கப்பட்ட பேர்களுக்கு வித்தியாதி தத்துவங்களில் ஞானக்கிரியா சத்தி யபிவிருத்தி தாரதம்மியதையாக வுண்டாம்.

தத் உக்தம் தத்ரைவ—

ஸாதநாந்யேதாநி தத்வாநி ருத்ராணாநாம் மஹாத்மநாம் ।
விசித்ரபுர மாலாபிஃ வசிதாநி மஹார்நிச ॥

திவ்யஸ்த்ரீபிஃ மஹாஸ்சர்யைஃ ஹோமைர் துஃகவிவர்ஜிதைஃ।
தநுஹோமேர்க்ரியாநை ஷ்யஸ்ச வசிதாந் யுந்நதாநிச ॥

ஹோமாயி காரயோஸ்ஸக்தி ஃ அபிவ்யக்தேஹ தீக்ஷயா ।
யேஷாம்தேஷாந்து ஹோமார்த்யம் ஸிவேந பரிகல்பிதம் ॥—இதி.

[1] சிருக்கு - மாலை. வனிதாதி - பெண்கள் முதலியன.

## வாக்குக்களால் அறிவுண்டாதல்

மூவகை அணுக்க ளுக்கு முறைமையால் விந்து ஞானம்
மேவின தில்லை யாகில் விளங்கிய ஞான மின்றும்
ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞான முண்டேற்
சேவுயர் கொடியி னன்தன் சேவடி சேர லாமே. 46

(உரை) விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் இவர்களுக்கு அடைவே சுத்தாத்துவா மிசிராத்துவா அசுத்தாத்துவா தாரதம்மியமாக வாச்சிய வாசக ஞானமானது பொருந்திற்றில்லையாகில் அறிவே இல்லையாம். இவ்வாச்சிய வாசக ஞானமாகிய விஞ்ஞானம் பிரகாசித்து, மேல் விஞ்ஞானப் பிரகாசமும் அப்பிரகாசமாம்படிச் சிவானந்தானுபவ ஞானேயமுண்டாமாகில், ரிஷபக் கொடியையுயர்த்த சிவனது செய்ய தாமரை மலர்போன்ற சிரீ பாதத்தை யடையலாம். உசு

## பிரபஞ்சகாரியந் தோன்றும் முறைமை

அருவினில் உருவந் தோன்றி அங்காங்கி பாவ மாகி
உருவினில் உருவ மாயே உதித்திடும் உலக மெல்லாம்
பெருகிடுஞ் சுருங்கும் பேதா பேதமோ டபேத மாகும்
ஒருவனே எல்லா மாகி அல்லனாய் உடனு மாவன். 47

(உரை) அருவினில்...உதித்திடும் - அருவமாகிய மாயையின் முதல் சூக்கும ரூபந்தோன்றி, தோன்றின அளவிற் சூக்கும ரூபம் அங்கமும் ஆன்மா அங்கியும் என்கிற தன்மையைப் பொருந்தி, மேற் சூக்குமரூபத்தில் தூலரூபமானது உண்டாம்; உலகமெல்லாம் பெருகிடும் சுருங்கும் - உலகங்களுக்கும் இப்படியே சூக்குமமாகிய தத்துவங்கள் உண்டாய், அவற்றிலே தூலமாகிய உலகமுண்டாய் விரியும். விரிந்த அடைவே தூலம் சூக்குமத்தினும் சூக்குமம் காரணத்தினும் ஒடுங்கும். இனி அந்தக் காரணமான மாயையும் காரியமாகிய பிரபஞ்சமும் எவ்வாறு நிற்குமெனின்; பேதாபேதமோடு அபேதமாகும் - காரிய காரணங்களாயிருக்கிற அவசரத்தின் மாயையென்றும் பிரபஞ்சமென்றும் இரண்டு பெயருரைக்கவுண்டாய்,



காரிய காரணங்களைப் பிரிக்கப்படாத தன்மையாற் பேதாபேதமுமாம், வஸ்துத அபேதமுமாம். வஸ்து ஒரு முதலாகையால் இப்படி மாயைதானே இவ்வாறாகில், கர்த்தா கேவலநிமித்தமேயோ எனின்; ஒருவனே எல்லாமாகி அல்லவாய் உடனுமாவன் - சிவனொருவனே மாயப்பிரபஞ்ச மெல்லாமாய்ப் பிரபஞ்சத் தன்மையுந் தானல்லவாய் [1]அனுப்பிரவிஷ்டனாக நின்று ஸ்திதியையும் பண்ணுவன்.

ஒருவன் என்னாது ஒருவனே என்ற ஏகாரத்தினால் [2]அனேகேசுவர வியாவிருத்தி. உஎ

மேலும் அதற்கோர் புறனடை.

அருவுரு ஈனு தாகும் விகாரமும் அவிகா ரத்து
வருவது மில்லை என்னின் வான்வளி யாதி பூதம்
தருவது தன்னின் மேக சலனசத் தங்க ளோடும்[கொள்ளே.
உருவின்மின் னுருமே றெல்லாம் உதித்திடும் உணர்ந்து

(உரை) அருவுரு...என்னின் - அருவத்தில் உருவ முண்டாகாது, ஆகையால் அருவமாயிருக்கிற மாயை உருவமாயிருக்கிற பிரபஞ்சத்தைப் பெறாது, அவிகாரியாயிருக்கிற சிவனிடத்தில் கிருத்தியமாகிற விகாரமும் வாராது என்னின்; வான் - ஆகாசம் விகார ரகிதமாயிருக்க; வளியாதி பூதம் தருவது மேகம் - [3]பார்த்திவமாயிருக்கிற தூமத்தையும் ஜலத்தையும் தேஜசையும் அருவமாயிருக்கிற வாயு அனுபந்தித்துக்கொண்டு மேகத்தை யுண்டாக்கும்; தன்னில் சலன சத்தங்களோடும் உருவின் மின் உருமேறெல்லாம் உதித்திடும் - அம்மேகத்தினிடத்தில் வாயுதருமமாகிய சலனமும், இவைகளுக்கு [4]அவகாசப் பிரதமாயுள்ள ஆகாய குணமான சத்தமும், தேஜசினுடைய தருமமான மின்னும் இடியும், [5]ஆப்பிய தருமமான ஜலமும், பிருதிவி தருமமான ரூபமும் உண்டாகக் கண்டோம்; உணர்ந்து கொள்ளே - இவ்வாறு சொன்ன திருட்டாந்தத்தின்படியே [6]தாட்டாந்திகத்தையும் அறிந்து கொள்வாயாக.

---

[1]உள்ளே நின்று. [2]அனேக ஈசுவரர் என்ற கருத்தை ஒதுக்கி விடுதல். [3]பார்த்திவம் - பிருதிவி சம்பந்தமானது. [4]அவகாசப் பிரதமாய் - இடங்கொடுக்கிற. [5]ஆப்பிய தருமம் - அப்புவின் இயல்பு. [6]தாட்டாந்திகம் - உபமேயம்.

189770



அவையாவன: மாயையும் கன்மமும் ஆணவமும் ஆன்மாவுங் கூடி நித்திய நின்மல நிர்விகாரியாயிருக்கிற ஈசுவரனுடைய சன்னிதியிற் பிரபஞ்சம் உண்டாம். உண்டாம்படி, மாயாகாரியமாகிய தனுகரணாதிகளும், கன்மபலமாகிய சுகதுக்கங்களும், ஆணவ தருமமாகிய மோகாதிகளும், ஆன்ம தருமமாகிய ஞாதிருத்துவ கர்த்திருத்துவபோக்திருத்துவங்களும், ஈசுவர சிற்சத்தி கிருத்தியமா யிருக்கிற ஞானப்பிரகாசமும் உண்டாய், இவை ஐந்துங்கூடிப் பிரபஞ்சமாம்.

இங்ஙனமன்றி, 'வான் வளியாதி பூதம் தரும்' என்பது, ஆகாயத்தில் வாயுவும், வாயுவில் அக்கினியும், அக்கினியில் அப்பும், அப்புவில் பிருதிவியும் உண்டாமென்று சொல்லலாகாதோ என்னின், மேற்பிரபஞ்ச பூதோற்பத்தியில் ஆகாசாதிகளில் ஒன்றொன்று தோன்றுமென்பதை நிராகரித்து, பஞ்சதன்மாத்திரையிற் பஞ்ச பூதங்களும் தோன்றுமென்று சமர்த்தித்திருக்கையால், பூதங்கள் ஒன்றிலொன்று தோன்றுமென்று சொல்லில், ஸ்வமத அஞ்ஞானமும் பரமதாப்பியனுஞ்ஞையும் இரண்டு நிக்கிரகஸ்தானம் உண்டாம்.

தத் உக்தம் காளிஹாஸேந - யஃம ஜ்யோதிஸ் ஸலீலம் மருதாம் ஸங்நிபாதஃ க்வமேவ॥ - இதி. உஅ

## ஈசன் கிருத்தியம் பண்ணும் முறை

மேல் விரித்த பொருளைத் தொகுத்துரைக்கின்றது.

மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலால னாலே
எண்ணிய உருவ மெல்லாம் இயற்றுவன் ஈசன் றானும்
கண்ணுகா ரியங்க ளெல்லாம் காரண மதனிற் காண்பன்
பண்ணுவ தெங்கே நின்றிங் கென்றிடிற் பகரக் கேள்நீ. 49

(உரை) மண்ணினின்...ஈசன் தானும் - பூமியினிடத்தில் மிருத்து கடம் முதலான பண்டங்களெல்லாம் குலாலனால் உண்டாம். அப்படிப்போல, பூதர் தேவ மனுஷ்ய தேகாதி அவயவங்களாகப் பண்ணப்பட்ட பிரபஞ்சமெல்லாம் ஈசுவரன் உண்டாக்குவன். எங்ஙன் எனின்; கண்ணுகாரியங்களெல்லாம் காரணமதனிற் காண்பன் - கருதப்பட்ட காரியங்களெல்லாம் காரணங்களில்

## இரண்டாம் நாள்

13-9-41 சனி - மாலை 5-30 மணி முதல் 8 மணி வரை

தலைவர் :

இராவ்பகதூர்

**C. M. இராமச்சந்திரச் செட்டியார் அவர்கள், B. A., B. L., F. R. G. S.**

தலைவர் முன்னுரை

'ஷெல்லி'—திரு. ஈ. த. இராஜேசுவரி அம்மையார் அவர்கள், M. A., L. T.

'தாயுமானர்'—வித்வான் திரு. பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார் அவர்கள்.

தலைவர் கருத்துரை

---

## மூன்றாம் நாள்

14-9-41 ஞாயிறு - மாலை 4 மணி முதல் 8 மணி வரை

தலைவர் :

**திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள். B.A., L.T., M.E.S.**

தலைவர் முன்னுரை, வாழ்த்துரைகள்

'ஆழ்வார் அன்பு'—பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மையார் அவர்கள்.

'பெரியபுராணம்'—திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள், B. A., B. L.

தலைவர் கருத்துரை

நன்றி கூறல்

Registered No. 2330. " SIDDHANTHAM " Vol. 14. No. 9

## காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகத் தொண்டைநாட்டு யாத்திரை

இதன் சார்பில், ஆவணி எ, அ (23, 24-8-41) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மெய்கண்டார் கழகத்தார் 150 அன்பர்களுடன் காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டுத் திருக்கச்சூராலக் கோயில், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம் ஆகிய மூன்று சிவதலங்களையும் வழிபாடு செய்துகொண்டு ஞாயிறு இரவு 7 மணிக்குக் காஞ்சி வந்து சேர்ந்தனர்.

சென்னைச் சைவ சித்தாந்த சமாசக் காரியதரிசியார் உயர்திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A., B. L. உடன்கலந்து கொண்டு தலைமை வகித்து நடத்திக்கொடுத்தமை போற்றத்தக்கதாக இருந்தது.

இவ்வழிபாட்டில் கலந்துகொண்ட அன்பர்களுக்கு உணவு, தங்குமிடம் முதலியன அளித்தும் தேவார வெளியீடுகளுக்குப் பொருளுதவி யளித்தும் நலனடைந்த செங்கற்பட்டுத் திருவாளர்கள், T. பச்சையப்ப முதலியார், C. A. சின்னசாமி முதலியார், ஏகாம்பரப்பிள்ளை ரிட்டயர்டு D. M. O. கண்ட்ராக்டர் இராமாநுசம் செட்டியார், சிவசங்கர முதலியார், தேசுமுகிப்பேட்டை கானக் கோயில் பேட்டை அன்பர்கள் ஆகிய இவர்களுக்குக் கழகம் மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகிறது.

---

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# திருப்போரூர்ச் சந்நிதிமுறை

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள் அருளிச்செய்த திருப்போரூர்ச் சந்நிதிமுறையும் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் அருளிச்செய்த அரும்பதவுரையும் குறிப்பும் நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாகச் "சித்தாந்தம்" ஆசிரியர் திரு. வி. உலகநாத முதலியாரவர்களுடைய 60-வது ஆண்டு நிறைவு நன்னாளன்று திருப்போரூர் முருகப்பெருமான் சந்நிதியில் வெளியிடப்பட்டது. 272 பக்கங்கொண்ட பெரிய நூல். நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்று முழுகலிகோ பைண்டு செய்யப்பெற்ற தனிப்பிரதி விலை அணா 10. 8 பிரதிகள் விலை ரூ. 4½. தபாற்கூலி வேறு. உடனே முன்பணமனுப்பிப் பிரதிகளைப் பெறுக.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.